ஜனங்களை இனியும் பிடித்துவைக்க அதற்கு எந்த உரிமையும் இல்லை.

என்னை விசுவாசித்து, நான் இப்போதே உங்களுக்கு உண்மையைச் சொல்கிறேன் என்று விசுவாசிக்கிற எவராயிருந்தாலும், ஒவ்வொரு அசுத்த ஆவியையும், சந்தேகத்தின் ஒவ்வொரு பிசாசையும் நான் கண்டிக்கிறேன்.

உங்களுக்கு என்ன பிரச்சனை இருந்தாலும் எனக்குக் கவலையில்லை, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்கள் கால்களில் எழுந்து நின்று, தேவனுக்குத் துதி செலுத்துங்கள், உங்கள் முழு கூட்டமும், இப்போதே குணமாக்கப்படுவீர்கள். நான் இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன்.

# யோவானுடைய சாட்சியைப்பார்க்கிலும் மேன்மையான சாட்சி

## A GREATER WITNESS THAN JOHN

55-0609

வியாழக்கிழமை மாலை, ஜூன் 9, 1955

போர்ட்டர் ஸ்டேடியம், மேக்கன்,
ஜார்ஜியா, அமெரிக்கா

**சகோ.வில்லியம் பிரன்ஹாம்**

# யோவானுடைய சாட்சியைப்பார்க்கிலும் மேன்மையான சாட்சி (55-0609)

மிக்க நன்றி. மாலை வணக்கம், நண்பர்களே. இன்றிரவு இங்கே இருப்பதிலும், சகோதரர் தாம் அவர்களின் இந்த அற்புதமான செய்தியை (நான் கேட்ட வரையில்) அனுபவிப்பதிலும் மிகவும் மகிழ்ச்சிய டைகிறேன். அவர் தேவனாகிய கர்த்தருடைய ஊழியக்காரரர் என்பதை நான் அறிவேன், ஏனென்றால் நான் அவரை அறிந்த நாள் முதற்கொண்டு அவர் அதை நிரூபித்திருக்கிறார். ஆகையால், இந்த செய்திக்காக நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் இது ஒவ்வொரு



உங்களுடையதைப் பெற்றுக்கொள்ளலாம், உயர் இரத்த அழுத்தத்திலிருந்தும் கூட.

இங்கே உட்கார்ந்திருக்கும் அந்த மனிதர். இங்கே ஒரு மனிதர் தன் மகனைப் பற்றிக் கவலைப்படுவதை நான் காண்கிறேன். அவர் ஒரு பையனைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார். அந்தப் பையன் ஏதோ ஒரு வகையான மனிதன்... அவனுக்குப் புற்றுநோய் இருக்கிறது.

மேலும் அவன்—அவன் ஏதோ ஒன்று; அவன் ஒரு போர்வீரனாக இருந்திருக்கிறான். அவன்—அவன்—அவன் கொரியப் போரில் இருந்தான், மேலும் அந்தப் பையனுக்குப் புற்றுநோய் இருக்கிறது, அவன் பின்வாங்கிப் போய்விட்டான், நீங்கள் அவனைப் பற்றிக் கவலைப்படுகிறீர்கள். அது சரிதானே, ஐயா? உங்கள் கையை உயர்த்தி தேவனைப் பரிகாரியாக ஏற்றுக்கொள்ளுங்கள்.

ஒவ்வொரு பிசாசையும், ஒவ்வொரு அசுத்த ஆவியையும், சந்தேகத்தின் ஒவ்வொரு பிசாசையும் நான் கண்டிக்கிறேன். இந்த

பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு சிறிய பெண்மணி அங்கே என்னைப் பார்க்கிறார்.

ஒரு சிறிய, இளஞ்சிவப்பு நிறத்திலான உடை அணிந்து... நீங்கள் ஆஸ்துமாவினால் கஷ்டப்படுகிறீர்கள். தேவன் உங்களைக் குணமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் ஒரு நிமிடம் எழுந்து நிற்பீர்களா? சரி. உங்களுக்கு ஆஸ்துமா இருக்கிறது, அல்லது உங்களுக்கு ஆஸ்துமா இருந்தது. இயேசு உங்களைச் சுகமாக்குகிறார்.

*54* உங்களுக்கு அருகில் இருக்கும் பெண்மணியை எழுந்து நிற்கச் சொல்லுங்கள்; அவரும் கஷ்டப்படுகிறார். அப்படியே நின்று கொண்டிருங்கள். சரி. நீங்கள் ஒரு தலை வியாதியினால் கஷ்டப்படுகிறீர்கள். இல்லையா, அம்மா? சரி. நீங்கள் சுகமாக்கப்பட்டு போகலாம். உங்களுக்கு அருகில் உள்ள பெண்ணை எழுந்து நிற்கச் சொல்லுங்கள்.

நீங்கள் விசுவாசிக்கிறீர்களா, அம்மா? தேவன் உங்களைச் சுகமாக்குவார் என்று விசுவாசிக் கிறீர்களா? சரி. நீங்களும்



இருதயத்திற்கும் நேராகச் சென்றிருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இப்போது, சகோதரர் தாம், ஆப்பிரிக்காவில் உள்ள பழங்குடியினருக்கு ஒரு—ஒரு மிஷனரி யாகவும் இருக்கிறார். அங்குள்ள அவரது பழங்குடி ஊழியத்திற்காக அவருக்கு ஒரு காணிக்கையை வழங்குவதற்கான (குறைந்த பட்சம், நான் அதைக் கேட்டேன்) ஏற்பாடுகளை அவர்கள் செய்து வருகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். நானே அங்கு சென்றிருந்த பிறகு, ஏன்... ஒரு மிஷனரியாக இருப்பது என்றால் உண்மையிலேயே என்ன அர்த்தம் என்பதை அறிந்திருப்பதால், சகோதரர் தாம் செய்யும் அந்த வகையான—வகையான ஊழியம் உண்மையிலேயே சரியான வகையாகும் என்று நான் நினைக்கிறேன்.

*2* பாருங்கள், முதல் காரியம், ஒரு வெள்ளைக்காரர் வரும்போது, தொடக்கத்தில், பழங்குடியினருக்கு அவர் மீது சற்று சந்தேகம் இருக்கும். ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பு கர்த்தர் கொடுத்த யோசனையை சகோதரர் தாம் கொண்டிருக்கிறார். ஒருமுறை, ஒரு மிஷன்

களத்திலிருந்து வந்த ஒரு சிறிய புத்தகத்தை படித்துக்கொண்டிருந்தேன், அதில் ஒரு வயது முதிர்ந்த கருப்பின மனிதரின் படம் இருந்தது, அவருக்கு சுற்றிலும் சிறிது வெள்ளை முடி இருந்தது. அவர் சொன்னார், "வெள்ளைக்காரரே, வெள்ளைக்காரரே, உங்கள் தந்தை எங்கே இருந்தார்?" அவர் சொன்னார், "நான் முதியவன், மந்த புத்தியுள்ளவன்; நான் இப்போதுதான் இயேசுவைப் பற்றி கற்றுக்கொள்கிறேன். நான் அவரை முன்பே அறிந்திருந்தால், நான் அவரை என் மக்களிடம் கொண்டு சென்றிருப்பேன்." அது என்னை மிகவும் பாதித்தது. "நான் இளமையாக இருந்தபோது அவரை அறிந்திருந்தால், அவரை என் மக்களிடம் கொண்டு சென்றிருப்பேன்." அது சரியானது. பாருங்கள், முதல் காரியம், பழங்குடியினர் செல்லக்கூடிய இடங்களுக்கு வெள்ளைக்காரரால் செல்லவே முடியாது. அவர் அதே காரியங்களைச் சார்ந்து வாழ முடியாது. "பழங்குடியினரை இரட்சிக்கச் செய்யுங்கள், பழங்குடியினரே தாமாக மிஷனரி வேலையைச் செய்யட்டும்" என்று நான் நினைத்தேன். அதைத்தான் சகோதரர் தாம் செய்கிறார்.



*53* நாம், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்று சொல்வோம் [சபையார், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்கிறார்கள்]. நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசமாய் இருங்கள்.

என் மகன் என் பக்கத்தில் தட்டுகிறான், எனவே நேரம் நெருங்கிவிட்டது என்று எனக்குத் தெரியும். நீங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்களா? உயர் இரத்த அழுத்தம் இருக்கிறது. உங்களுக்கு இருதய வியாதி இருக்கிறது.

உங்களுக்குப் பின்னால் இருக்கும் பெண்ணுக்கும் அதேதான், இருவருக்கும் உயர் இரத்த அழுத்தம், மேலும் நீங்கள் கணவன் மனைவியாய் இருக்கிறீர்கள். நீங்கள் உங்கள் வழியே வீட்டிற்குச் சென்று சுகமடையுங்கள். விசுவாசியுங்கள். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

சற்று முன்பு, அங்கே போய்க் கொண்டிருக்கும் அந்தப் பெண்மணி யார்? அவளுக்குப் பின்னால் ஒரு வெளிச்சம் தொடர்கிறது. இல்லை, அது அல்ல. இங்கே வெளியே நின்றுகொண்டு, என்னைப்

டைய நாமத்தில் நான் உனக்குக் கட்டளை யிடுகிறேன், இந்தப் பெண்ணை விட்டு வெளியே வா.

அவன் எவ்வளவு காலமாக உங்களைப் பிடித்திருக்கிறான்? இப்போது நான் சொல்வது நன்றாகக் கேட்கிறதா? நீங்கள் முற்றிலும் சாதாரணமாகவும் நலமாகவும் இருக்கிறீர்கள். தெரிகிறதா? இப்போது நான் சொல்வது நன்றாகக் கேட்கிறதா? என்ன...?... நான் சொல்வது கேட்கிறதா? ஆமென். ஆமென். பரிபூரணம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அந்த மற்ற வியாதியும் உங்களை விட்டு நீங்கிவிட்டது, அந்தப் பெண்களுக்கான வியாதி.

ஓ, ஆச்சரியமே. தேவனுக்குப் பெண் களுக்கான வியாதி எம்மாத்திரம்? ஏன், அவர் உங்களை அங்கேயே குணமாக்க முடியும். அதை நீங்கள் விசுவாசிக்கவில்லையா?

இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, நான் இந்தப் பிசாசைக் கண்டிக்கிறேன். நீங்கள் குணமாக்கப்பட்டுவிட்டீர்கள், சகோதரி.



3 மேலும் ஜோகன்னஸ்பர்க்கில், அந்த மதிய வேளையில் எங்களுக்கு முப்பதாயிரம் பேர் மனந்திரும்பிய அந்த நாளில், அதைப் பார்த்த பிறகு... அதைப் பற்றிய கதையை உங்களுக்குச் சொல்ல எங்களுக்கு நேரம் இருந்திருக்கலாம் என்று விரும்புகிறேன். அந்த மனிதர் குணமடைந்து, ஒரு நாயைப் போல நடந்து ஒரு சங்கிலியால் வழி நடத்தப் பட்டபோது... மேலும் கர்த்தராகிய இயேசு கூட்டத்திலுள்ள காரியங்களை வெளிப்படுத்தத் தொடங்கியபோது, அனைவரும்... டாக்டர் எஃப். எஃப். போஸ்வொர்த் (உங்களில் பலருக்கு அவரைத் தெரியும்), ஒரே நேரத்தில் இருபத்தைந்தாயிரம் பேர் குணமடைந்தி ருப்பார்கள் என்று அவர் கணித்தார். அவர்கள் அதைப் பார்த்தபோது ஒரே ஜெபத்தில் இருபத்தைந்தாயிரம் பேர் குணமடைந்தார்கள். அதே நேரத்தில் முப்பதாயிரம் பேர் இரட்சிக்கப்பட்டார்கள். மேலும் அவர்... நான் சொன்னேன், "இப்போது, அமெரிக்காவில் இருந்து சில மிஷனரிமார்கள் வரும் வரை காத்திருக்க வேண்டாம்." அவர்கள் மீது எனக்கு முழு மரியாதை உண்டு, ஆனால் காரியம்

என்னவென்றால், நண்பரே, டேவிட் லிவிங்ஸ்டன்கள் இப்போது இல்லை. யாராவது அங்கு செல்ல வேண்டும்.

இறையியலைப் பொறுத்தவரை, அவர்கள் ஏன் தங்கள் சிலைகள் போன்றவற்றின் மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள், அது வெறுமனே—வெறுமனே ஒரு சிந்தனை மாற்றம் மட்டுமே. ஆனால் தேவன் தம்முடைய வல்லமையில் அசைவாடுவதை அவர்கள் பார்க்கும்போது, அதுதான் பழங்குடியினரை மாற்றுகிறது. நான் சொன்னேன், "உங்கள் கல்விக்காகக் காத்திருக்க வேண்டாம். வெளியே சென்று இயேசு அவர்களுக்காக மரித்தார் என்று உங்கள் பழங்குடி நண்பர்களிடம் சொல்லுங்கள்."

4 டர்பன் செய்தித்தாளில் இருந்து எனக்கு ஒரு பகுதி கிடைத்தது, அதில் வலது மற்றும் இடது கை எது என்று கூடத் தெரியாத ஒரு மனிதர், காட்டில், அந்த—அந்த களத்தில், வாரத்திற்கு ஆயிரம் பழங்குடியினருக்கு ஞானஸ்நானம் கொடுத்துக்கொண்டிருந்தார். அவ்வளவுதான். அவனுக்கு—அவனுக்கு வலது



பெண்ணிடம் செவிட்டுத்தன்மை தொங்கிக் கொண்டிருக்கிறது.

ஓ தேவனே. கேட்க முடியவில்லை, ஆனால் உம்மால் எல்லாவற்றையும் செய்ய முடியும். அவளால் செய்தியைக் கேட்க முடியவில்லை, ஆகவே "விசுவாசம் கேள்வியினாலே வரும்." அதனால்தான் நான் அவளை நிறுத்துகிறேன், ஆண்டவரே, வேறு எந்த நோக்கத்திற்காகவும் அல்ல, விசுவாசம் வெளிப்பட வேண்டும் என்பதற்காகவே, "விசுவாசம் கேள்வியினாலே வரும்.

அவர்களால் கேட்க முடியாவிட்டால், விசுவாசம் எப்படி வரும்?" எனவே தேவனே, என் சகோதரியிடமிருந்து இந்தப் பொல்லாத ஆவியைத் துரத்துவதற்கு இந்த நேரத்தில் எனக்கு இந்த விசேஷ ஆசீர்வாதத்தைத் தருவீராக என்று ஜெபிக்கிறேன்.

எனவே, சாத்தானே, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிந்தின இரத்தத்தின் அடிப்படையில், அவருடைய பிரதிநிதியாக, ஒரு தூதனால் அனுப்பப்பட்டு, இதைச் செய்யும்படியாக நியமிக்கப் பட்டவனாக, ஜீவனுள்ள தேவனு

நீங்கள் அங்கே உட்கார்ந்திருந்தபோதே, நீங்கள் குணமாக்கப்பட்டுவிட்டீர்கள் என்று நான் உங்களிடம் சொன்னால், நீங்கள் அதை விசுவாசிப்பீர்களா? சரி. சந்தோஷமாக உங்கள் வழியே போங்கள், இயேசுவின் நாமத்தில் "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லிக் கொண்டே போங்கள்.

*52* வாருங்கள். நீங்கள் விசுவாசிக்கிறீர்களா, அம்மா? உங்களுக்கு ஒரு சீழ்க்கட்டி இருக்கிறது, அது பெண்களின் சுரப்பியில் இருக்கிறது. உங்களுக்குப் பெண்களுக்கான வியாதி இருக்கிறது.

இயேசு இப்போது உங்களைச் சுகமாக்குவார் என்று விசுவாசிக்கிறீர்களா? சரி. இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, நான் அதை விட்டு விலகும்படி கேட்கிறேன். ஆமென்.

நாம், "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம். [சபையார், "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்கிறார்கள்.]

இப்போது, நீங்கள் மீண்டும் உங்கள் தலைகளை வணங்குவீர்களா? இங்கே இந்தப்



மற்றும் இடது கை எது என்று கூடத் தெரியாது, ஆனால் தான் குணமடைந்ததையும், இயேசு தன்னை நேசிப்பதையும் அவன் அறிந்திருந்தான், அதை அவன் தன் பழங்குடி நண்பர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தான், அவர்கள் வந்த படியே அவர்களை நேராக தண்ணீருக்குள் அழைத்துச் சென்று அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். ஆக அது அற்புதமானது.

எனவே, சகோதரர் தாம் அவர்களின் அந்தப் பழங்குடி ஊழியங்களுக்காக நீங்கள் ஆதரவளிக்கும் போது, அல்லது இந்தக் காணிக்கையில் உதவும்போது, என் முழு இருதயத்தோடும் நான் சொல்கிறேன்: இது ஒரு தகுதியான காரியம், மிகச் சிறந்த காரியம் என்று நான் நினைக்கிறேன். இதற்காகக் கொடுப்பதில் நீங்கள் செய்யும் உதவிக்காக தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். இதைச் சொல்லும்படி சகோதரர் தாம் என்னிடம் ஒருபோதும் கேட்கவில்லை. நான்—நான் இதைச் சொன்னேன், ஏனென்றால் நாம் உதவி செய்வதற்கு நம்மால் கொடுக்க முடிகிற எல்லாவற்றுக்கும் அது—அது தகுதியானதாகும்.

இப்போது, எனக்குத் தெரியவில்லை... சகோதரர் பீலர், நீங்கள் எப்போதாவது இங்கே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறீர்களா? இதோ சகோதரர் பீலர் இங்கே அமர்ந்திருக்கிறார். அவர் டேப் ரெக்கார்டிங் செய்கிறார் என்று நினைக்கிறேன். எஸ்டல் பீலர், இந்த—இந்தக் கடைசிப் போரின் ஒரு படைவீரர், வெளிநாட்டில் அவருக்குக் காயம் ஏற்பட்டது, கை வெடித்துச் சிதறியது. அவர் வீட்டிற்கு வந்து, தன் இருதயத்தைக் கர்த்தராகிய இயேசுவுக்குக் கொடுத்தார், மிகவும் பிரதிஷ்டை செய்யப்பட்ட மனிதர், ஒரு சுவிசேஷகர். அவர் என் அண்டை வீட்டுக்காரர், என் நண்பர், எனக்கு தோழர்; அவர் குடும்பம், அவர் மனைவி, மிகவும் அன்பான பெண்மணி...

சகோதரர் பீலர் முதன்முதலில் மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவியானவரைப் பெற்ற போது... நான் சொல்வது தவறாக இருந்தால், சகோதரர் பீலர், நான் அப்படிச் சொல்ல நோக்கம் கொள்ளவில்லை. நான் சொல்வது சரி என்று நினைக்கிறேன். உங்கள் மனைவி, அதை விசுவாசிக்காத ஒரு குறிப்பிட்ட சபையைச் சேர்ந்தவர் அல்லவா? எனவே சகோதரர் பீலர்



என்றென்றும் சுகமடையவும், குணமாக்கப் படவும் அனுமதித்த கர்த்தராகிய இயேசுவுக்கு நன்றி சொல்லுங்கள்.

*51* நீங்கள் வருகிறீர்களா, அம்மா? உங்களுக்குத் தெரியுமா, அந்தப் பெண்மணியின் காரியம் சற்று கடினமாக இருந்தது, ஏனென்றால் நீங்கள் அவருக்கு முன்பாக நின்று கொண்டிருந்தீர்கள். புரிகிறதா? அவளுக்கு ஏதோ பிரச்சனை இருக்கிறது. அது என்னவென்று இப்போது எனக்கு நினைவில்லை.

ஆனால் நான் உங்களைப் பார்த்தேன், அவளிடம் சாப்பிடுவதைப் பற்றிச் சொல்லப்பட்டது. ஏனென்றால் அது ஒரு வயிற்று வியாதி. வயிற்று வியாதி இருந்தது உங்களுக்குத்தான். எனவே நீங்கள் உங்கள் வழியே போய், நீங்கள் விரும்புவதைச் சாப்பிடுங்கள். இயேசு உங்களைச் சுகமாக்குகிறார், அதை உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசியுங்கள்.

நாம், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்று சொல்வோம். [சபையார், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்கிறார்கள்]

உங்களை ஆசீர்வதிப்பாராக. கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக, என் அன்புச் சகோதரனே.

50 சரி. வாருங்கள். நீங்கள் வருகிறீர்களா, சகோதரி? உங்களைத் தொந்தரவு செய்த ஒரு பெண்களுக்கான வியாதி உங்களுக்கு இருக்கிறது, ஆனால் இப்போது உங்களைத் தொந்தரவு செய்யும் முக்கிய காரியம் இருதய வியாதிதான், ஏனென்றால் உங்களுக்கு மூச்சுத்திணறல், மற்றும் அது போன்ற காரியங்கள் ஏற்படுகின்றன.

அதிலும் குறிப்பாக நிறைய சாப்பிட்டுவிட்டு, நீங்கள் படுக்கும் போது. அது ஒரு நரம்புத் தளர்ச்சியினால் ஏற்பட்டது, அது இருதய வியாதி அல்ல; அது ஒரு நரம்புப் பிரச்சனை, அது வாயுவை உங்கள் இருதயத்திற்கு மேலே திரும்பச் செலுத்துகிறது. நீங்கள் இப்போது வீட்டிற்குச் செல்கிறீர்கள்.

நீங்கள் வீட்டிற்குச் சென்று, சாப்பிட்டு, சுகமாக, நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக் கிறீர்களா? நீங்கள் சுகமாவீர்கள் என்று விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால், சந்தோஷ மாக உங்கள் வழியே போங்கள், நீங்கள்



அவளைத் தனியாக விட்டுவிட்டு, தன் வழியில் சென்று, அவளுக்காகத் தொடர்ந்து ஜெபித்து வந்தார். பின்பு ஒரு நாள் இரவில் (அவளால் காலை வரை பொறுக்க முடியவில்லை), அவள் அவரை எழுப்ப வேண்டியிருந்தது, அங்கு அவள் தேவனிடம் தன்னைச் சரிசெய்து கொண்டாள்.

5 உங்களுக்கு ஒன்று தெரியுமா? அது ஒரு நல்ல காரியம். நீங்கள் உப்பாக மட்டுமே இருங்கள்; தேவன் தாகத்தை உருவாக்குவார். நீங்கள்...? ...நீங்கள் உப்பாக மட்டுமே இருங்கள். சகோதரர் பீலர், நீங்கள் ஒரு நிமிடம் எழுந்து நிற்க முடியுமா? சகோதரர் பீலர் எனது தனிப்பட்ட நண்பர், ஒரு சுவிசேஷகர், மிகவும் அன்பான சகோதரர், சகோதரர் எஸ்டல் பீலர். அவர் மனைவியும் குழந்தைகளும் இங்கே மைதானத்தில் எங்கோ இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன், மிகச் சிறந்த நண்பர். வழக்கமாக, நான் வரும்போது பிரசங்கிக்க வேண்டியிருக்கும்; எனக்கு வாய்ப்பு கிடைப் பதில்லை. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக, சகோதரர் பீலர்.

இப்போது, வேறு ஒருவரிடம் செல்வோம். இதோ என் நண்பர், சகோதரர் லியோ மெர்சியர். அவர் மிச்சிகனில் இருந்து வந்தவர். அவர்—அவர் அந்த பேட்ஜர் மாநிலத்திலிருந்து வந்திருக்கிறார் என்று நம்புகிறேன், அங்கிருந்து, நிச்சயமாக நீங்கள் மிச்சிகனிலிருந்து வந்ததற்காக மன்னிக்கப்படலாம், உங்களுக்குத் தெரியும். ஒரு மிகச் சிறந்த தம்பி, அவரும் ஜீன் கோடும், மற்றொரு தோழர், நெருங்கிய நண்பர்... நான் அவர்களை என் மாணவர்கள் என்று அழைக்கிறேன். அவர்கள் மிஷனரி தம்பிகள், மிஷனரிக்காகப் படிக்கிறார்கள். அவர்கள் கூட்டங்களுக்கு வந்து டேப் ரெக்கார்டிங் போன்றவற்றைக் கூட்டிக் கொள்கிறார்கள். தம்பிகளா, நீங்கள் ஒரு நிமிடம் எழுந்து நில்லுங்கள்: இரண்டு சிறந்த, கிறிஸ்தவ சகோதரர்கள். இவர் திரு. மெர்சியர், இவர் திரு. கோட். இந்த நபர்கள் கூட்டங்களுக்கு வந்து கூட்டங்களின் டேப்—டேப் ரெக்கார்டிங் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் காரியங்களை போதுமான அளவு மலிவாகப் பெறுகிறார்கள், அதனால் அவர்கள்... என்ன நடந்தது என்பதைத் தெரிந்துகொள்ள, யாருக்காவது ஒரு ரெக்கார்டிங்



இப்போதே அதை அழிக்க முடியும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

கர்த்தராகிய இயேசுவின் நாமத்திலே நான் உங்கள் மேல் என் கைகளை வைத்து, தேவன் இதை உங்களுக்காகச் செய்வாரா என்று கேட்கிறேன். இயேசுவின் நாமத்தில். ஆமென். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. போங்கள், உங்களுக்கு இனி அறுவை சிகிச்சை செய்ய வேண்டிய தேவையிருக்காது. சரி. உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்களா?

வணக்கம், ஐயா. தேவன் அந்தச் சிறுநீரக வியாதியை அங்கேயே உங்களை விட்டு விலக்க முடியும். அதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அதை ஏற்றுக்கொள்கிறீர்களா? நீங்கள் அவருடைய பிரசன்னத்தில் இருக்கிறீர்கள் என்று விசுவாசிக்கிறீர்களா?

அவர்தான் அதை எனக்குத் தெரியப்படுத்துகிறார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் உங்கள் வழியே போங்கள்; நீங்கள் கேட்டதை அப்படியே பெற்றுக்கொள்ளலாம். தேவன்

இருந்து வருகிறீர்கள். நீங்கள் பள்ளிக்கூடத்தில் இருந்தபோது, அதைப் பற்றி குறைசொல்வது வழக்கம்.

மேலும் உங்களுக்குக் கொஞ்சம் கிட்டப்பார்வையும் இருந்திருக்கிறது. நீங்கள் பள்ளியில் ஒரு சிறுமியாக இருந்தபோது, உங்கள் புத்தகத்தை வாசிக்கும்போது, அதை உங்களுக்கு மிக அருகாமையில் வைத்துக் கொள்வீர்கள். அந்த காரியங்கள் உண்மைதான், அம்மா. இப்போது, நீங்கள் குணமாக்கப்பட்டுவிட்டீர்கள்.

இப்போது முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நீங்கள் இப்போது சந்தோஷமாக உங்கள் வழியே போய், மகிழ்ச்சியாக இருக்கலாம். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*49* வாருங்கள், அம்மா. நீங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்களா? நான் உங்களுக்கு ஒரு அந்நியன். ஆனால் அந்தக் கட்டியை அகற்றுவதற்காக, ஒரு மருத்துவமனை உங்களுக்காகக் காத்திருக்கிறது. ஆனால் தேவன்



தேவையென்றால், இந்த மனிதர்களைப் பாருங்கள். அவர்கள் அதை இங்கே வைத்திருக்கிறார்கள். உங்களிடம் ஒரு டேப் ரெக்கார்டர் இருந்தால்...

*6* சகோதரர் வுட்—நான் அவரை எங்கும் காணவில்லை. ஆம், அவர் இங்கே அமர்ந்திருக்கிறார். இப்போது, சகோதரர் வுட் எனக்கு மிகவும், தனிப்பட்ட நண்பர். நான் சகோதரர் வுட்டை எப்படிச் சந்தித்தேன் என்றால், கர்த்தருடைய தூதன் வந்தபோது, இந்தப் படம் எடுக்கப்பட்ட அந்த ஹூஸ்டன் கூட்டத்தில் அவர் இருந்தார். அவர் ஒரு ஒப்பந்தக்காரரர். அவரிடம் கொஞ்சம் பணம் குறைவாக இருந்தது, எனவே ஒருவரிடம் சீரமைக்க வேண்டிய ஒரு களஞ்சியம் இருந்தது, அதனால் அவர் ஓடிப்போய், அந்த களஞ்சியத்தை அவருக்காகச் சீரமைத்து, ஹூஸ்டனுக்குச் செல்லப் போதுமான பணத்தைப் பெற்றார். அவரிடம் இருந்தது என்னவென்றால், அவரிடம் ஒரு முடமான சிறுவன் இருந்தான், அவன் கால் அவனுக்கு அடியில் சுருண்டிருந்தது. அவர்... எனக்கு அவரைத் தெரியாது. இதைவிடப் பல, பல

மடங்கு பெரிய கூட்டத்தில் அவர் அமர்ந்திருந்தார். எனவே நாங்கள் கிழக்கு நோக்கிச் சென்றோம், சகோதரர் வுட் எங்களைப் பின்தொடர்ந்து வந்தார். ஒரு நாள் இரவு, அவருடைய உண்மையுள்ள மனைவியும் (அவர் இன்றிரவு நம்முடன் இருக்கிறார், புத்தக விற்பனையாளர்) அந்தச் சிறுவனும் பார்வையாளர்கள் நடுவில் அமர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்தபோது... பரிசுத்த ஆவியானவர் திரும்பி, அந்தப் பெண்ணிடம் அவளைப் பற்றிய எல்லாவற்றையும் சொல்லி, அங்கே முடமாக ஒரு மகன் அவளுக்கு அமர்ந்திருக்கிறான் என்று சொன்னார். ஆனால், **"கர்த்தர் உரைக்கிறதாவது**, அவன் குணமடைந்துவிட்டான்" என்று சொன்னார்.

7 அந்தப் பையன் இன்றிரவு மைதானத்தில் எங்கோ இருக்கிறான், அவ்வளவு சுறுசுறுப்பாக இருக்கிறான், மைதானத்தில் நடக்கும் சிறந்த நபர்களைப் போலவே அவனும் இனி ஒரு முடவன் இல்லை, அதற்கான எந்த அறிகுறியும் எங்கும் இல்லை. தேவன் அவனைக் குணமாக்கி, அவனைச் சுகமாக்கினார். சகோதரர் வுட் தனது ஒப்பந்தத் தொழிலைக்



*48* வாருங்கள், சகோதரி. உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்களா? தேவன் இங்கே இருக்கிறார் என்று விசுவாசிக்கிறீர்களா? அவருடைய பிரசன்னம் அருகில் இருக்கிறது என்று விசுவாசிக்கிறீர்களா? இதைப் பெறுவதற்கு நீங்கள் மிகவும் இளமையான பெண். அது சரிதான்.

ஆனால் இது எதனால் ஏற்பட்டது என்றால், நீங்கள் எதற்கெடுத்தாலும் பதற்றப்படுகிற ஒரு நபர். நீங்கள் எப்பொழுதும் குழப்பத்தில் இருக்கிறீர்கள்; நீங்கள் பதற்றமாக இருக்கிறீர்கள். அது உங்களுக்கு ஒரு வயிற்று வியாதியை ஏற்படுத்தியிருக்கிறது. மேலும் அது ஒரு குடல் புண்ணாகி, உங்கள் வயிற்றில் அமிலத்தை ஏற்படுத்தி, மற்றும் பல காரியங்களைச் செய்திருக்கிறது:

எரிச்சல்கள், மற்றும் உங்களுக்கு உணவு ஒத்துக் கொள்ளவில்லை, மேலும் நீங்கள் இரவில் அமைதியின்றி இருக்கிறீர்கள். அது முற்றிலும் சரிதான். உண்மையாகவே நீங்கள் ஒரு குழந்தையாக இருந்ததிலிருந்தே, நீங்கள் சிறுமியாக இருந்ததிலிருந்தே பதற்றமாகவே

இப்போது தேவன் உங்களை அந்த இருதய வியாதியிலிருந்து குணமாக்குகிறார் என்று விசுவாசிக்கிறீர்களா? அது சரிதான். அப்படியா னால் சந்தோஷமாக உங்கள் வழியே போங்கள், "அதைக் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லிக்கொண்டே போங்கள்.

47 இப்போது, அதே காரியம்தான்: இருதய வியாதி. இப்போது, தேவன் அந்த...?... சுகமாக்குவார் என்றும், உங்களையும் சுகமாக்குவார் என்றும் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் போங்கள்... சரி. உங்கள் வழியே போங்கள், நீங்கள் கேட்டதை அப்படியே பெற்றுக்கொள்ளலாம்.

நாம், "தேவனுக்கு ஸ்தோத்திரம்!" என்று சொல்வோம். [சபையார் பதிலளிக்கிறார்கள்]

அப்பா, அந்தப் பழைய விறைப்புத்தன்மை போய்விட்டது என்று விசுவாசிக்கிறீர்களா, நீங்கள் சந்தோஷமாக, மகிழ்ச்சியாக உங்கள் வழியே போகிறீர்களா? தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. அப்படியே தொடர்ந்து நடந்து, தேவனைத் துதித்துச் சத்தமிட்டு, நீங்கள் கேட்டதைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



கைவிட்டுவிட்டு, சும்மா சுற்றித் திரியவும், புத்தகங்களை விற்கவும், எனக்கு உதவி செய்யவும் என்னுடன் வருகிறார். அதுமட்டு மில்லாமல், அவர் இந்தியானாவுக்கு குடி பெயர்ந்து, எனக்குப் பக்கத்திலேயே ஒரு இடத்தை வாங்கினார், நாங்கள் உண்மையாகவே நண்பர்கள். சகோதரர் வுட், நீங்கள் ஒரு நிமிடம் எழுந்து நிற்க முடியுமா? சகோதரர் வுட்... அவர் மனைவி எங்கே இருக்கிறார் என்று எனக்குத் தெரியவில்லை. அவர் அநேகமாக வெளியே புத்தகக் கடையில் எங்காவது இருக்கலாம்.

அந்தப் பையன் இங்கே எங்கோ இருக்கிறான். டேவிட், நீ எங்கே இருக்கிறாய்? நீ ஒரு நிமிடம் எழுந்து நிற்க முடியுமா, மகனே? முடமாக இருந்த ஒரு சிறுவன், அவன் கால் அவனுக்கு அடியில் சுருண்டிருந்தது... அவன் இப்போது மைதானத்தில் எங்காவது நின்றுகொண்டிருப்பானோ என்று எனக்குத் தோன்றுகிறது? அவன் அநேகமாக இங்கே சுற்றிக் கொண்டிருக்கலாம். அவனும் பில்லியும் நல்ல நண்பர்கள். நான் அவனை இப்போது பார்க்கவில்லை. ஆனால் நாம் அவனை மேலே வரவழைப்போம், ஒருவேளை மேடைக்கு

நடந்து வரச் செய்வோம். என்னைப் போலவே அவனும் ஒரு சிறு கிராமத்துப் பையன், அவன் வெட்கப்படுபவன், அவன்—அவன் சற்று கூச்ச சுபாவமுள்ளவன். ஆனாலும் அவன் இங்கே எங்கோ சுற்றிக் கொண்டிருக்கிறான். அவன் கால் அவனுக்கு அடியில் சுருண்டிருந்தது, கர்த்தர் அவனை உடனடியாக குணமாக்கினார். அதற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். அவர் நமக்கு நல்லவர் அல்லவா? அவர் எல்லாத் துதிக்கும் எல்லாவற்றிற்கும் பாத்திரர்.

இப்போது, சகோதரர் ஆர்கன்பிரைட், நான் அவரை இன்னும் பார்க்கவில்லை. அவர் இதுவரை வந்திருக்கிறாரா இல்லையா என்று எனக்குத் தெரியவில்லை. மேலும் சகோதரர் ஜாக் மூர், எனக்குத் தெரியவில்லை... அவர்கள் கூட்டத்தில் இருந்தால், அவர்கள் எழுந்து நிற்பார்கள் என்று நம்புகிறேன், ஏனென்றால் நான்—நான் கொஞ்ச நேரமாக அவர்களைத் தேடிக்கொண்டிருக்கிறேன். அவர்கள் இருவரும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பே இங்கே இருந்திருக்க வேண்டும், எனவே



எதற்காக வந்தீர்கள்... உங்களுக்குப் பல பிரச்சனைகள் இருக்கின்றன: முதலாவது, ஒரு தைராய்டு வியாதி. ஆனால் நீங்கள் வந்ததற்கான முக்கிய காரணம், கீல்வாதத்தால் நீங்கள் எப்போதுமே விறைத்துப்போகிறீர்கள், தேவன் உங்களைக் குணமாக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்.

அது சரிதானே? இப்போது நீங்கள் அதை ஏற்றுக் கொள்கிறீர்களா? அப்படியானால் சந்தோஷமாக உங்கள் வழியே போங்கள்; அது எல்லாம் உங்களை விட்டு நீங்கிப்போம், நீங்கள் சுகமாவீர்கள். நாம், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்று சொல்வோம். [அவர், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்கிறார்]

உங்களுக்குப் பெண்களுக்கான வியாதி ஒன்று உள்ளது. அது உங்களுக்கு நீண்ட காலமாக இருக்கிறது. ஆனால் உங்களுக்கு இருக்கும் பெரிய பிரச்சனைகளில் ஒன்று, அல்லது உங்கள் உயிரை வாங்குவதற்கு மிக அருகில் இருப்பது, நீங்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் இருதய வியாதி ஆகும்.

வாருங்கள், ஐயா. இருதய நோயைக் குணமாக்குவது தேவனுக்கு ஒரு பெரிய காரியமே அல்ல. அவர் எந்த நேரத்திலும் உங்களை முழுமையாக்க முடியும். நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? சரி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லிக்கொண்டு, சந்தோஷமாக உங்கள் வழியில் செல்லுங்கள். சரி.

நீங்கள் வருவீர்களா, அம்மா? நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இந்தச் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து தேவன் உங்களைக் குணமாக்கி, உங்களைச் சுகமாக்க முடியும் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

உங்கள் கையை உயர்த்தி, "நான் அதை ஏற்றுக்கொள்கிறேன்" என்று சொல்லுங்கள். பின்பு, "தேவனுக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லிக்கொண்டு, சந்தோஷமாக உங்கள் வழியில் செல்லுங்கள். இயேசுவின் நாமத்தினாலே.

*46* அம்மா, நீங்கள் உங்கள் முழு இருதயத்தோடு விசுவாசிக்கிறீர்களா? நீங்கள்



நாங்கள் எந்த நேரத்திலும் அவர்களைப் பார்க்கக் காத்திருக்கிறோம்.

*8* இப்போது, நாளை இரவு, ஒரு ஓய்வுக்கான இரவாக வைத்துக்கொண்டு, வியாதிப்பட்டவர்களுக்காக ஜெபிக்க நமது போதக சகோதரர்கள் நமக்கு உதவுவதை நீங்கள் எப்படி விரும்புகிறீர்கள்? நீங்கள் அனைவரும் அதை விரும்புவீர்களா? தேவனாகிய கர்த்தர், ஊழியம் செய்யும் சகோதரர்களின் ஜெபத்திற்கும் பதிலளிக்கிறார் என்பதை நீங்கள் பார்க்கட்டும். மேலும் நாம்... உள்ளே வந்து வியாதிப் பட்டவர்களுக்காக ஜெபிப்பது சுவிசேஷகர்கள் மட்டுமல்ல, ஜெபிக்கிற எந்த ஒரு உண்மையான நபரின் ஜெபத்திற்கும் தேவன் பதிலளிப்பார். போதகர்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் ஒரு இரவை நான் எப்போதும் விரும்புகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, ஒரு சுவிசேஷகர் ஊரை விட்டு வெளியேறும்போது, அவர் சபையைத் தன்னைச் சுற்றியே வைத்திருந்தால், அவர் சென்றதும் அந்த ஏழைப் போதகருக்கு என்ன கிடைக்கும்? அதுவாக இருந்தால்... "சரி, போதகர், அவர் வெறும்..." என்று மக்கள் நினைக்கிறார்கள். நினைவில் கொள்ளுங்கள்,

களத்தில் உள்ள எந்தவொரு சுவிசேஷகரைப் போலவும் அல்லது வேறெவரையும் போலவும் அவரும் தேவனுடைய மனிதரே. அவர் ஒரு உண்மையான, மெய்யான தேவனுடைய மனிதர். அவர்கள் இங்கே பிரதிநிதித்துவப் படுத்தப்படுவதை நாங்கள் காண விரும்பு கிறோம், தேவன் அவர்களின் ஜெபத்திற்கு பதிலளிக்கிறார் என்பதை உங்களுக்குக் காட்ட விரும்புகிறோம்.

நேற்றிரவு வீட்டிற்கு வந்ததை நான் நினைத்துக் கொண்டிருந்தேன், அல்லது நான்... நேற்றிரவு அவர்கள் என்னை சற்று அதிக நேரம் தங்க அனுமதித்தார்கள், அதைச் செய்ததற் காகவும், சற்று அதிக நேரம் தங்கியதற்காகவும் சகோதரர் வுட்டும் பில்லியும் இரவு வெகுநேரம் வரை, கிட்டத்தட்ட பன்னிரண்டு மணி வரை மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். அது வேறு ஒன்று, அதை என்னால் விளக்க முடியாது, நண்பர்களே; என்னால் முடிந்தால் நன்றாக இருக்கும். அதை முயற்சி செய்யக்கூட வேண்டியதில்லை. ஆனால் அது எப்படித் தோன்றுகிறது என்றால், அவர்கள் காற்றில் சுமார் ஒரு மில்லியன் மைல்களுக்கு மேலே



போவதாக. இயேசுவின் நாமத்தில் வெளியே வா, சாத்தானே.

அம்மா, தேவன் இப்போது உங்களை ஆசீர்வதிப்பாராக. அந்த இருண்ட கோடு இல்லாமல் போனது. சந்தோஷத்தோடும் மகிழ்ச்சியோடும் உங்கள் வழியில் செல்லுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

*45* என் சகோதரனே, நீங்கள் வருவீர்களா. நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? தேவன் உங்களைக் குணமாக்குவார் என்று நீங்கள் விசுவாசிக் கிறீர்களா? எனக்கு உங்களைத் தெரியாது என்பது உங்களுக்குத் தெரியும், ஆனால் தேவன் உங்களை அறிவார், இல்லையா?

இந்த நீரிழிவு நோயிலிருந்து தேவன் உங்களைக் குணமாக்கி, நீங்கள் சுகமாக வீட்டிற்குச் செல்லும்படி செய்வார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? சரி. நீங்கள் கர்த்தராகிய இயேசுவுக்கு நன்றி சொல்லிக்கொண்டு, சந்தோஷமாக உங்கள் வழியில் செல்லலாம்.

[சபையார், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!" என்கிறார்கள்] அது சரிதான். கர்த்தராகிய இயேசு இரக்கமுள்ளவராக வெளிப்படுகிறார்.

நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? ஒரு நிமிடம். அம்மா, நீங்கள் மிகவும் மோசமான வியாதியோடு இருந்தீர்கள், இல்லையா?

ஐயா, அந்த இடத்தின் இறுதிக்கு அடுத்ததாக அங்கே அமர்ந்திருக்கிற உங்களுக்குப் புற்றுநோய் இருக்கிறது, இல்லையா? நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இந்த அம்மாவும் விசுவாசிக்கிறார்கள்.

இயேசு கிறிஸ்து உங்களைக் குணமாக்குவார் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? நீங்களும் அதை விசுவாசிக்கிறீர்களா? அப்படியானால் உங்கள் கையை உயர்த்துங்கள்.

சர்வவல்லமையுள்ள தேவனே, ஜீவனைத் தருகிறவரே, இந்தப் பிசாசை நாங்கள் கண்டிக்கிறோம். கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே, அது அவர்களை விட்டுப்



இருக்கிறார்கள், பின்னர் நீங்கள் மீண்டும் ஒரேயடியாக பூமிக்குக் கீழே விழுகிறீர்கள், அது—அது ஒரு பயங்கரமான உணர்வு. ஆனால் அது எதைக் குறிக்கிறது? நாம் ஏறிச் செல்லக்கூடிய ஒரு உயர்ந்த தளம் உள்ளது. ஒரு நாள் நாம் இன்னும் மேலே செல்வோம்.

9 அவர்கள் எதையோ பற்றி அல்லது வேறு எதையோ பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்... இப்போது, கூட்டங்கள், என்னைப் பொறுத்தவரை, நான் அவற்றை அறிந்து கொள்ளும் ஒரே வழி, யாராவது என்னிடம் சொல்வது அல்லது இந்த டேப்களில் ஒன்றை எடுத்துப் பார்ப்பதுதான். நானும் இந்த டேப்களைப் பெறுகிறேன். ஒவ்வொரு கூட்டத்திலிருந்தும் அவை குறிப்புகளுக்காக வைக்கப்பட்டுள்ளன. பின்னர் நான் அந்த டேப்பை மீண்டும் கேட்கிறேன், ஆராதனை எப்படிச் சென்றது என்று நான் கேட்கிறேன். ஆனால் எனக்கு அது ஒரு கனவு போன்றது. ஒரு கருப்பின மனிதனைப் பற்றி, கட்டிலில் அல்லது ஸ்ட்ரெச்சரில் அல்லது வேறு எதிலாவது படுத்திருந்த ஒருவர், நடந்ததைப்

பற்றி ஏதோ ஒன்று அல்லது வேறு ஏதோ ஒன்று இருந்தது.

அது எனக்கு நினைவூட்டியது... கொஞ்ச காலத்திற்கு முன்பு, டல்லாஸில், நான் ஒரு கூட்டத்திற்காக டல்லாஸுக்குச் சென்றிருந் தேன்... வரிசையை அழைப்பதற்கு முன்பு இப்போது ஒரு சிறு வார்த்தை. நான் ஒரு கூட்டத்திற்காக டல்லாஸுக்குச் சென்றிருந்தேன். திரும்பி வரும் வழியில், விமானம் ஒரு புயலில் சிக்கிக்கொண்டது, நான் டென்னசியின் மெம்பிஸில் தரையிறங்க வேண்டியிருந்தது. அங்குள்ள அந்த பெரிய, பிரபலமான ஹோட்டலுக்கு என்னை அவர்கள் அழைத்துச் சென்றார்கள், நானே, விமான நிறுவனங்கள் அதை வைத்திருந்தது ஒரு நல்ல காரியம், ஏனென்றால் என்னால் அந்த ஹோட்டலில் தங்கியிருக்க முடியாது. அது (நான் மறந்துவிட்டேன்), பீபாடி ஹோட்டல். அவர்கள் அடுத்த நாள் காலையில் என்னை அழைப்ப தாகவும், இரவு முழுவதும் தங்குவதற்கு அங்கே ஒரு அறையைத் தருவதாகவும் என்னிடம் சொன்னார்கள். நான் விமானத்தை சோதிக்கும் நேரத்திற்குச் செல்ல, அடுத்த நாள் காலையில்



*44* இப்போது சாத்தானே, இந்த அம்மா வைச் செவிடாக்கின உன்னை, அவளை விட்டுப் போகும்படி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக நான் உனக்குக் கட்டளையிடுகிறேன். இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே அவளை விட்டு வெளியே வா. ஒவ்வொரு தலையும் ஒரு நிமிடம் தாழ்ந்திருக்கட்டும்.

நான் பேசுவது உங்களுக்குக் கேட்கிறதா? இப்போது நான் பேசுவது உங்களுக்குக் கேட்கிறதா? "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லுங்கள். இப்போது, உங்கள் கைகளை உயர்த்தி, கர்த்தரைத் துதியுங்கள். இப்போது நான் பேசுவது நன்றாகக் கேட்கிறதா? சரி, இப்போது நீங்கள் உங்கள் தலைகளை உயர்த்துங்கள்.

இப்போது, கர்த்தரைத் துதியுங்கள். இதோ உங்களுக்கான சுகம். உங்களுடைய அந்தப் பொருள் போய்விட்டது; உங்களுக்கு இனிமேல் அவை தேவையில்லை. சந்தோஷமாக மேடையை விட்டுச் செல்லுங்கள். நாம், "கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்வோம்.

வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தவரே, நித்திய ஜீவனை அருளுகிறவரே, ஒவ்வொரு நல்ஈவையும் கொடுக்கிறவரே, சர்வவல்லமையுள்ள தேவனே. எங்கள் பரலோகப் பிதாவே, நாங்கள் உம்மிடமிருந்து அற்புதங்களை விரும்பவில்லை. ஏனென்றால் ஒரு பலவீனமானதும் விபசாரமுமான சந்ததி அப்படியானவைகளைத் தேடுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆனால் ஆண்டவரே, உமது பிள்ளைகளுக்கு விடுதலையை நாங்கள் விரும்புகிறோம். நீர் இங்கே இருக்கிறீர் என்று நாங்கள் விசுவாசிக்கிறோம். வேதாகமத்தில், "செவிட்டு ஆவி ஒரு மனுஷனை விட்டுப் போனபோது, அவனால் கேட்க முடிந்தது" என்று எழுதப்பட்டிருக்கிறது.

மேலும் பிதாவே, எனக்காக மகிமையை தேடாமல், தேவனுடைய மகிமைக்காக, இந்தச் செவிட்டு ஆவி அந்த அம்மாவை விட்டுப் போகும்படி நான் உம்மை வேண்டிக் கொள்கிறேன். பிதாவே, உமது ஊழியக்காரனின் ஜெபத்தைக் கேட்டருளும்.



என்னை அழைப்பார்கள். எனவே நான், "அது நல்லது" என்று சொன்னேன். நான் மாடிக்குச் சென்று, சிறிது நேரம் ஜெபித்த பிறகு, சில கடிதங்களை எழுதிவிட்டு, படுக்கைக்குச் சென்றேன்.

*10* அடுத்த நாள் காலையில், சூரியன் உதிப்பதற்கு வெகு நேரத்திற்கு முன்பே, நான் சீக்கிரம் எழுந்தேன். அவர்கள்—அவர்கள் விமானம் புறப்படும் நேரம் என்று என்னிடம் சொன்னார்கள்... அந்த லிமோசின் கார் எட்டு மணிக்கு வந்து எங்களை அழைத்துச் செல்லும். அப்போது சுமார் ஆறு முப்பது மணி. "அடடா, எனக்கு நிறைய நேரம் இருக்கிறது, நான் அப்படியே கீழே இறங்கி, என்னிடம் உள்ள இந்தக் கடிதங்களை தபாலில் போட்டுவிட்டு, அதை முடித்துவிடுவேன். அதன்பிறகு நான் கீழே சென்று, லிமோசினில் ஏறி, வெளியே சென்று விமானத்தைப் பிடித்து, வீட்டிற்குச் செல்வேன்" என்று நான் நினைத்தேன்.

அன்று காலையில் நான் புறப்பட்டேன். நான் நீண்ட நேரம் ஜெபித்திருந்தேன், கூட்டத்திற்குப் பிறகு சீக்கிரம் எழுந்தேன், சற்றே

பதட்டமாகவும் நடுக்கத்துடனும், மிகவும் இறுக்கமாக இருந்தேன், உங்களுக்குத் தெரியும், தரிசனங்கள் மற்றும் பல காரியங்களால்... தேவனுடைய இறையாண்மையுள்ள கிருபையை உங்களுக்குக் காட்டுகிறேன். பின்பு தெருவில் நடந்து சென்றபோது, நீங்கள் பெந்தெகோஸ்தே மக்கள் பாடும் அந்தச் சிறு பாடல்களில் ஒன்றைப் பாடிக்கொண்டே நான் தெருவில் நடந்து சென்றேன். ஓ, அதனுடைய பெயர் என்ன... "அவர்களில் நான் ஒருவன் என்று சொல்வதில் மகிழ்ச்சியடைகிறேன்". அதுதான் என்று நம்புகிறேன். ஆம். "மக்கள் அனைவரும் மேலறையில் கூடினார்கள், பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள், மேலும்—மேலும் அவர் அன்று அவர்களுக்குச் செய்ததை, அவர் உங்களுக்கும் அதேபோலச் செய்வார்." உங்களுக்கு அது தெரியுமா? அது ஒரு... சரி, அந்தப் பாடலைத்தான் நான் என் மனதிற்குள் கொண்டுவர முயன்றேன். நான் அதை எனக்குள்ளாகவே பாடிக்கொண்டு தெருவில் நடந்து சென்றேன், உங்களுக்குத் தெரியும். "மக்கள் மேலறையில் கூடினார்கள், அனைவரும் ஒருமனப்பட்டு, ஜெபித்துக்கொண்டிருந்தார்கள்.



என்றழைக்கப்படும் ஒரு தெருவிலிருந்து வருகிறீர்கள், அது 302 மானுமென்ட் ஸ்ட்ரீட், அகஸ்டா, ஜார்ஜியா. இப்போது தேவனுக்கு நன்றி சொல்லிக்கொண்டு, சந்தோஷமாக உங்கள் வீட்டிற்குத் திரும்பிச் செல்லுங்கள், நீங்கள் குணமாக்கப்படுவீர்கள்.

43 பரலோகப் பிதாவே, இந்த அம்மாவை கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஆசீர்வதிக்கிறேன். அவள் சென்று அவள் எதைக் கேட்டாளோ அதைப் பெற்றுக்கொள்வாளாக.

நாம், "தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக" என்று சொல்வோம். [சபையார், "தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக!" என்கிறார்கள்] இப்போது, விசுவாசமாயிருங்கள். உங்கள் முழு... விசுவாசியுங்கள்.

ஓ, அது அந்த அம்மா. அந்த அம்மாவின்மேல் ஒரு செவிட்டு ஆவி இருக்கிறது. நமக்கு ஒரு பதில் கிடைக்கும் வரை, எங்கும் உள்ள நீங்கள் உங்கள் தலைகளைத் தாழ்த்துவீர்களா.

உங்களை அறிவார். முதலாவதாக, நீங்கள் இந்த நகரத்தைச் சேர்ந்தவர் அல்ல.

நீங்கள் வடக்கிலிருந்து, தெற்கு நோக்கி வந்திருக்கிறீர்கள். அட்லாண்டா என்றழைக்கப் படும் நகரத்திலிருந்து வந்திருக் கிறீர்கள். மேலும் நீங்கள் அதற்குச் சற்று வெளியே இருக்கிறீர்கள். நீங்கள் ஒரு பெண் பிரசங்கியார்.

அது சரிதான். காண்கிறீர்களா? மேலும் நீங்கள் சிறுநீர்ப்பை பிரச்சனையினாலும் ஒரு ஸ்திரீக்குரிய நோயினாலும் கஷ்டப் படுகிறீர்கள். அது உங்களை விட்டுப் போய்விட்டது. நீங்கள் கர்த்தரைத் துதித்துக்கொண்டு, மகிழ்ச்சியாக உங்கள் நகரத்திற்குத் திரும்பிச் செல்லுங்கள்.

தேவன்மேல் விசுவாசமாயிருங்கள். சந்தேகப்பட வேண்டாம். விசுவாசியுங்கள், ஏனென்றால் விசுவாசிக்கிறவர்களுக்கு எல்லாம் கூடும். [ஒலி நாடாவில் காலியிடம்]

நீங்கள்தான் வியாதியஸ்தர், அப்படித்தானே? சரி. நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமில் லாதவர்கள்... [ஒலி நாடாவில் காலியிடம்]... திருமதி. பிரவுன், நீங்கள் மானுமென்ட் ஸ்ட்ரீட்



இயேசு வல்லமையோடு வந்தார்," ஏதோ ஒன்று. நான் அதைச் சரியாக நினைவுகூர முயன்று கொண்டிருந்தேன்.

நான் தெருவைக் கடக்க ஆரம்பித்தேன். நான் தெருவைக் கடக்க ஆரம்பித்தபோது, பரிசுத்த ஆவியானவர், "ஒரு நிமிடம் நில்" என்றார்.

*11* நான் நினைத்தேன், "இப்போது, என்ன?" எனவே நான் சென்றேன், மீண்டும் அதைக் கடக்க ஆரம்பித்தேன், ஏதோ ஒன்று என்னை நிற்க அல்லது கடக்க விடாமல் தடுத்தது. நான் அங்கே ஒரு பக்கமாக, ஒரு சிறிய பழைய இடத்திற்குத் திரும்பினேன், அங்கே இப்படிப்பட்ட ஒரு சில—சில, ஓ, கம்பங்கள் போன்ற ஒரு கூட்டம் இருந்தது, அங்கே நான் ஜெபித்துக்கொண்டிருந்தேன். "ஆண்டவரே, நான் என்ன செய்ய வேண்டும் என்று நீர் விரும்புகிறீர்?" என்று நான் நினைத்தேன்.

அவர் சொன்னார், "திரும்பி பின்னால் செல், தொடர்ந்து நடந்து செல்." இப்போது, அது மிகவும் தெளிவாக இருந்தது, அது வெறுமனே உங்கள் மனதில் மட்டும் தோன்றுவதல்ல; நான்

அதைக் கேட்டேன். அங்கு அவர், அந்த ஒளி, சுழன்றுகொண்டிருந்தது.

எனவே நான் அப்படியே திரும்பிப் பின்னால் சென்றேன். ஹோட்டலைக் கடந்து நடந்தேன், நடந்துகொண்டே இருந்தேன், நடந்து கொண்டே, நடந்துகொண்டே இருந்தேன், தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தேன். நான் என் கடிகாரத்தைக் கீழே பார்த்தேன்; எட்டு மணிக்கு இன்னும் பத்து நிமிடங்களே இருந்தன. நான் தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தேன். அவர், "நட" என்று மட்டுமே சொன்னார், அதனால் தொடர்ந்து நடப்பது மட்டுமே எனக்குத் தெரிந்த ஒரே காரியமாக இருந்தது.

12 நான் நதியை நோக்கிக் கீழே வெகுதூரம் சென்றேன், அங்கே ஏராளமான ஏழை மக்கள் வாழ்ந்த ஒரு பகுதிக்குக் கீழே சென்றேன். நான் தொடர்ந்து இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம் தூரம் நடந்தேன். "அடடா" என்று நான் நினைத்தேன். நான் கருப்பின மக்கள் வசிக்கும் பகுதிக்குள் இறங்கினேன், அதே வழியில் தொடர்ந்து கீழே சென்றுகொண்டே



அம்மாவை விட்டுப் போகும்படி நான் உனக்குக் கட்டளை யிடுகிறேன். ஆமென். சகோதரி, தேவனுக்கு நன்றி செலுத்தியும் அவரைத் துதித்தும் உங்கள் வழியில் செல்லுங்கள். ஆமென்.

42 நீங்கள் விசுவாசிக்கிறீர்களா சகோதரி? உங்கள் முழு இருதயத்தோடும்? சரி. நான் அவருடைய ஊழியக்காரன் என்று நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அப்படி விசுவாசிப் பதற்காக, நான் மிகவும் நன்றியுள்ளவ னாயிருக்கிறேன். சரி.

இப்போது, அப்படி... கர்த்தராகிய இயேசு இங்கே இருக்கிறார் என்றும், உங்களை அறிவார், என்னை அறிவார், ஒவ்வொரு நிலையையும் பற்றி எல்லாவற்றையும் அறிவார் என்றும் நீங்கள் விசுவாசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

நான் அவருடைய கரத்தில் ஒரு கருவியாக மட்டுமே இருக்கிறேன். நான் உங்களை ஒருபோதும் பார்த்ததில்லை, உங்களைப்பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது, ஆனால் தேவன்

உங்களைச் சுற்றிலும், நெருங்கி வருவது போல ஒரு பெரிய இருண்ட ஆவி காணப்படுகிறது, அது ஒரு பயங்கரமான நரம்புத் தளர்ச்சி நிலை.

நீங்கள் சில காலமாக அதினால் தொந்தரவு செய்யப்படுகிறீர்கள். இப்போது, நீங்கள் கீழே விழுந்ததை நான் பார்த்தேன். மேலும் நீங்கள்-உங்கள் முழங்காலை காயப்படுத்திக் கொண்டீர்கள். உங்கள் முழங்கால், அதற்காகத்தான் நான் ஜெபிக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள், அது உங்கள் முழங்கால்தான்.

மேலும் நீங்கள் ஒரு கிறிஸ்தவர். மேலும் நீங்கள் ஒரு சபைக்குள் செல்வதை நான் பார்க்கிறேன். அது ஒரு-ஒரு முழு... அது அசெம்ப்ளி ஆஃப் காட் சபை. நீங்கள் அசெம்ப்ளிஸ் ஆஃப் காட் சபையைச் சேர்ந்தவர். உங்கள் சுகத்திற்காக இப்போது முன்னே வாருங்கள்.

தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, கிறிஸ்தவருக்கு இந்தத் தீமையைச் செய்த பிசாசை நான் கண்டிக்கிறேன். வெளியே வா, சாத்தானே. இந்த



இருந்தேன், அங்கே கீழ்ப்பகுதிகளில் வெகு தொலைவில், எங்கோ, நடந்துகொண்டிருந்தேன்.

சிறிது நேரத்திற்குப் பிறகு, நான் ஒரு சிறிய பாடலை மெதுவாக முணுமுணுத்துக் கொண்டிருந்தேன், எனக்குள்... "விசுவாசித்தால் எல்லாம் கூடும், விசுவாசித்தால் மட்டுமே". அங்கிருந்த ஒரு சிறிய, பழைய, கருப்பின நபரின் வீட்டின் மேல் சாய்ந்தபடி பார்த்தேன், அது ஒருவித வெள்ளை அடிக்கப்பட்ட வீடு, அங்கு ஒரு கேட் இருந்தது. அங்கு ஒரு பழைய, வழக்கமான ஆன்ட் ஜெமைமா போன்ற தோற்றமுடைய ஒரு பெண்மணி தன் தலையைச் சுற்றி ஒரு—ஒரு—ஒரு ஆணின் சட்டையைக் கட்டிக்கொண்டு, இந்த கேட்டின் குறுக்கே இப்படிச் சாய்ந்திருந்தாள். ஓ, அநேகமாக அங்கிருக்கும் அந்தக் கம்பங்கள் எவ்வளவு தூரத்தில் இருக்கிறதோ அவ்வளவு தூரத்தில். நான் மெதுவாக முணுமுணுத்துக்கொண்டிருந்தேன். அவள் என்னைப் பார்ப்பதை நான் கண்டதும், முணுமுணுப்பதை நிறுத்திவிட்டு, கடந்து செல்ல ஆரம்பித்தேன். அவளுடைய பெரிய, தடிமனான கன்னங்கள், உங்களுக்குத் தெரியும், அவள் தன்

கண்களில் இருந்து கண்ணீரைத் துடைத்தாள். அவள், "காலை வணக்கம், பார்சன்" என்றாள்.

சரி, நான் அவளைப் பார்த்து, "அம்மா?" என்றேன்.

அவள் சொன்னாள், "நான், 'காலை வணக்கம், பார்சன்' என்று சொன்னேன்." இப்போது, டென்னசியில், பிரசங்கிப்பவர் ஒரு பார்சன் என்று அழைக்கப்படுவார். இங்குள்ள கருப்பின மக்களாகிய உங்களுக்கு அது அப்படி அழைக்கப்படுகிறதா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் அவள், "காலை வணக்கம், பார்சன்" என்றாள்.

*13* நான் நின்றேன். நான், "நான் ஒரு பார்சன் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்றேன். பார்க்கிறீர்களா? "இது விசித்திரமாக இல்லையா?" என்று நான் நினைத்தேன். ஏதோ ஒன்று அசையத் தொடங்கியது. ஒருவேளை இதற்காகத்தான் கர்த்தர் என்னை நடந்து வரும்படி விரும்பினாரோ. எனவே நான், "நான் ஒரு பார்சன் என்று உங்களுக்கு எப்படி—எப்படித் தெரியும்?" என்றேன்.



அருகே மரணத்தின் ஆவி அங்கே படிந்திருப்பதை நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

ஆனால் தேவன் என்னைத் திருப்பி, உங்களுக்கு வெளிப்படுத்தி உங்களிடம் பேசுவார் என்று நீங்கள் விசுவாசித்து ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள். மேலும் நீங்கள், உங்கள் ஜெபத்தில், இந்த வாக்குத்தத்தத்தைச் செய்தீர்கள்: நான் உங்களிடம் பேசினால், நீங்கள் உங்கள் சுகத்தை ஏற்றுக்கொள்வீர்கள் என்று. அது உண்மைதானே, இல்லையா?

அது சரிதான். சரி. நீங்கள் இருதய நோயினால் கஷ்டப்படுகிறீர்கள், இல்லையா? அது சரி என்றால், உங்கள் கையை உயர்த்துங்கள். இப்போது, நீங்கள் சுகமாகச் செல்லுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. உங்கள் விசுவாசம் உங்களைக் குணமாக்குகிறது. தேவனுக்குத் துதியையும் மகிமையையும் செலுத்துங்கள். விசுவாசம் வையுங்கள்.

*41* சரி அம்மா. இப்போது உங்கள் முழு இருதயத்தோடும் நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இப்போது, நீங்கள் கஷ்டப்படுகிறீர்கள்.

நான் ஜெபிக்கிறேன். ஆமென். ஆமென். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. சந்தோஷமாகச் செல்லுங்கள். சரி.

*40* நீங்கள் வருவீர்களா அம்மா? ஓ, ஆச்சரியமே. இப்போது, உலகத்தின் முழு ராஜ்யமும் கிறிஸ்தவர்களுக்கு உரியது. அவருடைய ராஜ்யத்தில் உள்ள அனைத்தும் உங்களுடையதே. உங்கள் விசுவாசத்தினால், அவர் எல்லாவற்றையும் உங்களுக்கு இலவசமாகக் கொடுக்கிறார். ஆமென். விசுவாசம் வைத்து இப்போது நம்புங்கள்.

இவர்தான் என் வியாதியஸ்தரா? சரி. அம்மா, நீங்கள் ஒரு நிமிடம் என்னைப் பார்க்க வேண்டும் என்று விரும்புகிறேன். நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்கள் என்று நினைக்கிறேன். நாம் ஒருவரையொருவர் அறியோம், ஆனால் கர்த்தராகிய இயேசு நம் இருவரையும் அறிந்திருக்கிறார்.

சகோதரனே, வெள்ளைச் சட்டை அணிந்து என்னைப் பார்த்துக்கொண்டிருக்கும் பெரியவரே, நீங்கள் அங்கே அமர்ந்து ஜெபித்துக் கொண்டிருக்கிறீர்கள். ஏனென்றால் உங்களுக்கு



அவள் சொன்னாள், "ஏன், பார்சன்," என்றாள், "நீங்கள் வருவதை நான் பார்த்தபோது," அவள் சொன்னாள், "நீங்கள் ஒரு பார்சன் என்று எனக்குத் தெரிந்தது." மேலும் அவள் சொன்னாள், "பார்சன், குழந்தை இல்லாத சூனேமியாளைப் பற்றி பைபிளில் உள்ள அந்தக் கதையை நீங்கள் எப்போதாவது படித்திருக்கிறீர்களா, எலியா தீர்க்கதரிசி சென்று அவளை ஆசீர்வதித்தார், அவளுக்கு ஒரு குழந்தை பிறந்தது?"

நான் சொன்னேன், "ஆம், அம்மா."

*14* அவள் சொன்னாள், "சரி, நான் அந்த வகையான ஒரு பெண்ணாக இருந்தேன்." மேலும் அவள் சொன்னாள், "நான் கர்த்தரிடம் ஜெபித்தேன்," என்று அவள் சொன்னாள், "அவர் எனக்கு ஒரு குழந்தையைக் கொடுத்தால், நான் அவரை நேசிக்கவும் அவரை மதிக்கவும் அதை வளர்ப்பேன் என்று கர்த்தரிடம் சொன்னேன்." அவள் சொன்னாள், "நான் ஒரு சலவைக்காரி," என்றாள், "நான்—நான் பிழைப்புக்காக துணி துவைக்கிறேன்." பின்பு அவள் சொன்னாள், "உங்களுக்குத் தெரியும், என் குழந்தை ஒரு

மனிதனாக வளர்ந்தபோது," என்றாள், "அவன் ஒரு பெரிய பையன்," என்றாள், "அவன் தவறான நட்புடன் வெளியே சென்றான், பார்சன்." அவள் சொன்னாள், "அவனுக்கு ஒரு பயங்கரமான வியாதி வந்துவிட்டது," என்றாள், "அது எனக்குத் தெரியாது." மேலும் சொன்னாள், "வைத்தியர் அவன் இனி வாழ முடியாது என்று சொல்லும் அளவுக்கு, அவன் வெகு தூரம் சென்றுவிட்டான்." அவள் சொன்னாள், "அவன் அங்கே வீட்டிற்குள் இருக்கிறான், நேற்று முதல் அவன் இறந்துகொண்டிருக்கிறான்." மேலும் அவள் சொல்கிறாள், "அவன் எங்கே இருக்கிறான் என்று அவனுக்குத் தெரியவில்லை, அவன் வெறும் முனகிக்கொண்டிருக்கிறான்." அவள் சொன்னாள், "என் குழந்தை இறப்பதைப் பார்ப்பதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை." குழந்தையா? சுமார் நூற்று எண்பது பவுண்டுகள் எடை... அவள் சொன்னாள், "என் குழந்தை இறப்பதை என்னால் பார்க்க முடியாது."

ஆனால் நினைவில் கொள்ளுங்கள், அது அவளுக்குக் குழந்தை, ஒரு தாய்க்கு. அது சரிதான். நீங்கள் யாராக இருந்தாலும் சரி, என்ன



பயங்கரமான நிலையில் இருக்கிற ஒரு ஸ்திரீயை நான் பார்க்கிறேன். அது ஒரு-அது மற்றொரு ஸ்திரீ. அவள் ஒரு தோழி. இல்லை, அப்படி இல்லை;

அவள் உங்களுடைய சகோதரி. நீங்கள் ஒரு சிறுமியாக எழுந்து வருவதையும், விளையாடுவதையும் நான் பார்க்கிறேன். இப்போதும், அவள் படுத்திருக்கிற அந்த இடம், ஒரு...?... உடைய மருத்துவமனையைப் போல இருக்கிறது... அவள் தொங்கிக்கொண்டிருக்கிற ஒரு கறுப்பு ஆவியால் முழுமையாகக் கட்டப்பட்டிருக்கிறாள்...?... பேய்களின் ஆதிக்கம். அவள் ஒரு மருத்துவமனையில் பிசாசின் ஒடுக்குதலினால் கஷ்டப்படுகிறாள். **பரிசுத்த ஆவியானவர் உரைக்கிறதாவது**. இப்போது, உங்கள் முழு இருதயத்தோடும் நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

எங்கள் பரலோகப் பிதாவே, கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே, நான் எங்கள் சகோதரியின் மீது கைகளை வைக்கும்போது, அவள் எதற்காக வந்திருக்கிறாளோ அதைப் பெற்றுக்கொள்வாளாக, இயேசுவின் நாமத்தில்

விட்டார் என்றும், அவருடைய சமுகம் இங்கே இருக்கிறது என்றும் நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? நீங்கள் அதை விசுவாசிக்கிறீர்களா? சரி.

இப்போது, இங்கே இருக்கிற இந்த அம்மா, ஒருவேளை, அவள் ஒரு அறிமுகமில்லாதவராக இருக்கலாம் என்று நான் நினைக்கிறேன். அப்படித்தான் என்று நான் கருதுகிறேன், இல்லையா அம்மா? நாம் ஒருவருக்கொருவர் அறிமுகமில்லாதவர்கள். எனக்கு உங்களைத் தெரியாது.

நான் என் வாழ்வில் உங்களை ஒருபோதும் பார்த்ததில்லை, ஆனால் கர்த்தராகிய இயேசு உங்களைப் பற்றி எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். மேலும் நீங்கள்... நான் உங்களைப் பார்க்கிறேன், அந்த அம்மாவுக்குப் பின்னால் வெகு தொலைவில் மற்றொரு ஸ்திரீ நிற்கிறாள். அவள் அதே ஸ்திரீதான், ஆனால் அவள் இளையவளாக இருக்கிறாள்.

மேலும் அவள் தலை சம்மந்தமான ஏதோவொன்றினால் கஷ்டப்படுகிறாள்... அது ஒரு ஒற்றைத் தலைவலி. உங்களுக்கு நீண்ட காலமாக அது இருக்கிறது. மேலும் ஒரு



செய்தாலும் சரி, நீங்கள் ஒரு உண்மையான தாயாக இருந்தால், அது இன்னும் உங்கள் குழந்தைதான்.

15 ஆகையால், அவள் சொன்னாள், "கர்த்தருக்குச் சேவை செய்ய அவனை வளர்ப்பேன் என்று நான் கர்த்தருக்கு வாக்களித்திருந்ததை அறிந்திருந்தும், என் குழந்தை அந்த நிலையில் இறப்பதைப் பார்ப்பதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை." அவள் சொன்னாள், "நேற்றிரவு முழுவதும் நான் ஜெபித்தேன்." அவள் சொன்னாள், "நான் சொன்னேன், 'ஆண்டவரே, நான் இப்போது என்ன செய்ய முடியும்?'" எனவே, அவள் சொன்னாள், "உங்களுக்குத் தெரிய வேண்டிய முதல் காரியம், நான் தூங்கச் சென்றேன், நான் ஒரு கனவு கண்டேன்." அவள் சொன்னாள், "ஒரு பழுப்பு நிற சூட் அணிந்து, ஒரு பழுப்பு நிற தொப்பியை அணிந்துகொண்டு ஒரு மனிதர் வருவதை நான் கண்டேன்." அவள் சொன்னாள், "கர்த்தர் சொன்னார், 'இதோ என் பார்சன்.'" மேலும் அவள் சொன்னாள், "நான் விழித்தெழுந்தபோது, மணி சுமார் மூன்று இருக்கும்." ஆகையால் அவள் சொன்னாள்,

"அப்போதிருந்து நான் இங்கேயே நின்று, உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன்."

ஒருவேளை, இதில் எனக்கு இடமாற்றம் ஏற்பட்டது என்று நான் நம்புகிறேன். [சகோதரர் பிரன்ஹாம் பொது அறிவிப்பு அமைப்பில் ஏற்பட்ட ஒரு கீச்சல் சத்தத்தைக் குறிப்பிடுகிறார்]

அவள் சொன்னாள், "நான் உங்களுக்காக மூன்று மணியிலிருந்து இங்கேயே காத்து நிற்கிறேன்."

சரி, நான் அங்கு சென்றபோது, வெளியே அவள் நின்றுகொண்டிருந்த இடத்தில், அந்த ஏழை முதியவளின் முதுகில் இன்னமும் ஈரம் இருந்தது.

*16* மேலும் அவள், "நான் உங்களைப் பார்ப்பதற்காக இங்கே மூன்று மணியிலிருந்து காத்துக்கொண்டிருக்கிறேன்" என்றாள். "நீங்கள் தெருவில் நடந்து வருவதை நான் பார்த்தபோது, என் கனவில் நான் பார்த்த அதே மனிதராக நீங்கள் இருந்தீர்கள், நீங்கள்தான் அந்தப் போதகர் என்று நான் அறிந்துகொண்டேன்,"



வைத்து, அவளுக்கு இந்தத் தீமையைச் செய்கிற சத்துருவைக் கண்டிக்கிறேன். அது அவளை விட்டு வெளியேறி அவளை விட்டுப் போவதாக. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே அவளை விட்டு வெளியே போ. ஆமென். சரி, சகோதரி, இந்தப் பக்கமாகப் பாருங்கள். அங்கு உங்கள் வாழ்க்கையில் என்ன இருந்தது என்பதை அவர் அறிந்திருந்தார் என்றால்... நீங்கள் அதற்கு ஒரு சாட்சியாக இருக்கிறீர்கள். அது உண்மையாக இருந்ததா? ஒவ்வொரு வார்த்தையும் உண்மையா? சரி. இதுவும் உண்மைதான்: சந்தோஷத்துடனும் மகிழ்ச்சியுடனும் இங்கிருந்து செல்லுங்கள். அது உங்களை விட்டுப் போய்விட்டது. இப்போது, சந்தோஷமாகச் செல்லுங்கள்; நீங்கள் சுகமாகி விடுவீர்கள். இனிமேல் கவலைப்படாதீர்கள்.

தேவன் மேல் விசுவாசமாயிருங்கள். "சந்தேகப் படாமல், உங்கள் முழு இருதயத் தோடும் விசுவாசியுங்கள், நீங்கள் கேட்பதை பெற்றுக்கொள்வீர்கள்."

இப்போது, மேசியாவாகிய கர்த்தராகிய இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்து

பாத்திரங்களைக் கழுவவோ அல்லது ஏதேனும் செய்யவோ முயற்சிக்கும்போது, அவள் அவைகளைக் கீழே தவறவிடுகிறாள். ஆனால் அவளுக்கு... அதனுடைய பிரச்சனை என்னவென்றால், அவள்... அவளுடைய பிரச்சனை அவளுடைய முதுகில் இருக்கிறது. அது அவளுடைய தண்டுவட நிலையாகும், அதுதான் அவளுக்குப் பிரச்சனையைக் கொடுக்கிறது. மேலும் அந்த அம்மா ஏதோ ஒரு காரியத்தினாலும் கஷ்டப்படுகிறாள்... ஆம், அவள் அதை உணர்ந்திருக்கிறாள். அவளுக்குக் கட்டிகள் இருக்கின்றன. அந்த கட்டிகள் அவளுடைய மார்பில் அமைந்திருக்கின்றன. அது உண்மைதானே, இல்லையா? இப்போது, அப்போது பேசியது நான் அல்ல. அது- இப்போது இது நான்தான், ஆனால் அது அவராக இருந்தார், அவர் என்ன சொன்னாரோ அது. நீங்கள் அவரை உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறீர்களா? அப்படி யானால் ஒரு நிமிடம் இங்கே வாருங்கள், மற்றும்...?...

*39* எங்கள் பரலோகப் பிதாவே, இந்த ஏழைக் குழந்தையின் மீது என் கைகளை



என்று சொன்னாள். மேலும் அவள், "உள்ளே வரமாட்டீர்களா?" என்றாள்.

அதன்பின் தொங்கிக்கொண்டிருந்த சிறிய சங்கிலி கொண்ட அந்த கேட்டை அவள் திறந்தபோது, அன்று காலை நான் அந்தச் சிறிய கருப்பினத்தவரின் வீட்டுக்குள் நுழைந்தேன், தரையில் எந்த விரிப்பும் இல்லை, ஒரு சிறிய, பழைய, இரும்பு கட்டில் மட்டுமே அங்கே இருந்தது. ஆனால் நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நான் எப்போதாவது தேவனு டைய பிரசன்னத்திற்குள் சென்றிருக்கிறேன் என்றால், அது அங்கேதான் சென்றேன். சுவரில் எந்தப் படங்களும் ஒட்டப்பட்டிருக்கவில்லை. கதவுக்கு மேலே ஒரு சிறிய படம் தொங்கிக்கொண்டிருந்தது, அதில் "தேவன் எங்கள் வீட்டை ஆசீர்வதிப்பாராக" என்று எழுதப்பட்டு, சுத்தமாக இருந்தது.

நான் சுற்றிலும் பார்த்தேன், அந்தச் சிறிய இரும்பு கட்டிலின் மேல் ஒரு பெரிய, பருமனான, பலசாலி இளைஞன் படுத்திருந்தான். அவன் தன் கையில் அந்த- அந்த-அந்தப் போர்வையை (அல்லது

கம்பளியை) இப்படிப் பிடித்துக்கொண்டு, "ஊ, ஊ, ஊ" என்று சத்தம் கொடுத்துக் கொண்டிருந்தான்.

நான், "என்ன..." என்றேன். "காலை வணக்கம், வாலிபனே," என்று சொன்னேன்.

17 அவள் சொன்னாள், "போதகரே, அவனுக்கு எதுவும் தெரியவில்லை." "இரண்டு நாட்களாக அவனுக்கு எதுவும் நினைவில்லை," என்றாள். "அவன் பேசுவதெல்லாம், தான் ஒரு பெரிய ஆழமான கடலில் இருப்பதாகவும், அது முழுதும் இருட்டாக இருப்பதாகவும், தான் தொலைந்துபோய்விட்டதாகவும் மட்டுமே சொல்கிறான்," என்றாள். பின்பு அவள் அழத் தொடங்கினாள். மேலும், "அவன் இரட்சிக்கப் பட்டான் என்று அவன் ஒரு வார்த்தை சொல்வதை நான் கேட்க முடிந்தால், அவனை இழக்கக்கூட நான் தயாராக இருப்பேன்," என்று அவள் கூறினாள்.

ஆகையால், "சரி, மருத்துவர்கள் ஏதாவது..." என்று நான் கேட்டேன்.



அறிந்திருக்கிறாள். அது தேவனிடமிருந்து மட்டுமே வரமுடியும் என்பதை அவள் அறிந்திருக்கிறாள்.

இப்போதும், அம்மா, நீங்கள் இந்தப் பக்கமாகப் பார்த்து, உங்கள் முழு இருதயத்தோடும் விசுவாசிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். கர்த்தராகிய இயேசுவைக் குறித்து நீங்கள் அதிகமாக அறிந்துகொள்ள நான் உங்களுக்கு உதவுவதற்கான ஒரே வழி இதுதான். நீங்கள் எதற்காக இங்கே வந்திருக்கிறீர்கள் என்று தெரியாமல், உங்களைப்பற்றி ஒன்றும் தெரியாமல், ஆனால் தேவன் அறிந்திருக்கிறார். ஆனால் அந்த அம்மா கவனிக்கத் தொடங்கும் போது, அவள் ஒரு பயங்கரமான நரம்புத் தளர்ச்சி நிலையினால் கஷ்டப்படுகிறாள். மேலும் அந்த நரம்புத் தளர்ச்சி நிலை மிகவும், மிகவும் மோசமாக இருக்கிறது. இப்போது, அவள் பொருட்களைப் பற்றிக்கொள்ள முயற்சிப்பதைப் பார்க்கிறேன். அவள் எப்போதும் பொருட்களைக் கீழே தவற விடுகிறாள். அவளுக்கு ஒருவிதமான மயக்க நிலை-சில நேரங்களில் அவளுக்கு அது மோசமாகிறது, குறிப்பாக நண்பகலில், அவள்

*(காண்கிறீர்களா?),* நாம் தகுதியானவர்கள் என்பதற்காக அல்ல, ஆனால் அவருடைய வார்த்தையினிமித்தம்.

*38* இப்போது, இங்கே நின்று கொண்டிருக்கிற இந்த அம்மா, அவளுடன் பேசிக்கொண்டு, அவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன், நீங்கள் எனக்குப் பதிலளிக்க வேண்டியதில்லை, அவள் பதிலளிக்காமல் இருப்பதே நல்லது என்று கருதுகிறேன். ஆனால் அவளுடைய ஆவியைப் பிடிப்பதற்காக, அவளைத் தனியே கொண்டுவருவதற்காக, ஏனென்றால் அது எல்லா இடங்களிலிருந்தும் வந்துகொண்டிருக்கிறது... ஆனால் இந்த-இந்த அம்மாவைக்குறித்து கர்த்தர் என்னிடம் ஒரு காரியத்தைக்கூட சொல்லாமல் இருக்கலாம். தான் அவருடைய சமுகத்தில் இருக்கிறோம் என்பதை அவள் உணருகிறாள். அது நான் அல்ல என்பதை அவள் அறிந்திருக்கிறாள். இப்போதே அவளுக்கு ஏற்பட்டிருக்கிற அந்த உணர்வு, அவள் மேல் அசைவாடிக்கொண்டிருக்கிறது, அந்த மேகம் அவளுக்கும் எனக்கும் நடுவே தங்கும்போது, அது ஒரு மனிதன் அல்ல என்பதை அவள்



"அவனுக்காக அவர்களால் எதுவும் செய்ய முடியாது, போதகரே. அவன் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டது," என்றாள். அது சிபிலிஸ் (syphilitic) நோயாக இருந்தது. "அது மிகவும் முற்றிவிட்டது. அது அவனுடைய இருதயத்தை அரித்து, அதில் ஓட்டைகளை உருவாக்கி விட்டது," என்று சொன்னாள். "இனி அவனுக்கு எதுவும் செய்ய முடியாது," என்றும் கூறினாள்.

நான், "அம்மா, என் பெயர் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டேன்.

அதற்கு அவள், "இல்லை, ஐயா. உங்களைக் குறித்து நான் கனவு காணும் வரை, இதற்கு முன்பு உங்களை நான் பார்த்ததே இல்லை," என்றாள்.

அதற்கு நான், "என் பெயர் பிரன்ஹாம்" என்றேன். "நான் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கிறேன். என்னைக் குறித்து நீங்கள் எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என்று கேட்டேன்.

அவள், "இல்லை ஐயா, நான் கேள்விப்பட்டதே இல்லை," என்றாள்.

"நீங்கள் என்னோடு சேர்ந்து ஜெபிப்பீர்களா?" என்று நான் கேட்டேன்.

அவள், "ஆம், ஐயா" என்றாள்.

18 அன்று காலை அந்தச் சிறிய, பழைய, எளிமையான வீட்டில் நாங்கள் முழங்கால் படியிட்டபோது... நான் நான்கு ராஜாக்களின் அரண்மனைகளுக்குச் சென்று, அவர்களுக்காக ஜெபித்திருக்கிறேன். இங்கிலாந்தின் ராஜா ஜார்ஜ் மற்றும் குஸ்டாஃப் போன்றவர்களுக்காகவும் ஜெபித்திருக்கிறேன். இந்த தேசத்தில் உள்ள சில மிகச் சிறந்த வீடுகளுக்கு நான் சென்றிருக்கிறேன், ஆனால் அன்று காலை அந்தச் சிறிய குடிசையில் அவள் என்னை வரவேற்றபோது கிடைத்த வரவேற்பை விட மேலான ஒரு வரவேற்பு எனக்கு எங்கும் கிடைக்கவில்லை.

நான் தரையில் முழங்கால்படியிட்டேன்; நான் அவளைப் பார்த்தேன். "அம்மா, நீங்கள் ஜெபத்தை நடத்துகிறீர்களா?" என்று கேட்டேன்.

"ஆம், போதகரே," என்று அவள் கூறினாள்.



அதற்கு அவள், "நீர் தீர்க்கதரிசி என்று அறிகிறேன்" என்றாள். அவள் கூறினாள், "மேசியா வரும்போது, அவர் இந்தக் காரியங்களைச் செய்வார் என்று எனக்குத் தெரியும், ஆனால் ஒரு தீர்க்கதரிசியாக நீர் யார்?"

அவர், "நானே அந்த மேசியா" என்றார்.

எனவே அப்போது அதுதான் மேசியாவின் அடையாளமாக இருந்தது. இன்றும் அதுவே மேசியாவின் அடையாளமாக இருக்கிறது. இப்போது அவர் இங்கே வந்து, நீங்களும் நானும் இருக்கிற இந்த மனிதர்களாகிய நமக்குள் வந்து, நம்முடைய சரீரத்துக்குள் வந்து, அவர் அந்தக் கிணற்றண்டையிலிருந்த ஸ்திரீக்குச் செய்த அதே காரியங்களைச் செய்தால், அது மேசியாவின் அடையாளமாக இருக்கும் என்று நீங்கள் விசுவாசிப்பீர்களா? நீங்கள் அதை அந்த வழியில் ஏற்றுக்கொள்வீர்களா? சபையார் அதை-அதை அந்த வழியில், மேசியாவின் அடையாளமாக ஏற்றுக் கொள்வார்களா? இப்போது, அவர் தமது மகிமைக்காக அதை அருளுவாராக, தமது வார்த்தையினிமித்தம்

கிணற்றண்டையிலிருந்த ஸ்திரீயும் இருந்தது போல. நீங்கள் அவளுடைய இடத்தை எடுத்துக்கொள்கிறீர்கள் என்று அர்த்தமல்ல, ஆனால் இது ஒரு புருஷனும் ஒரு ஸ்திரீயும் நின்று பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்பது போலிருக்கிறது. இப்போது, அவர் அவளுடன் உரையாடலைப் பிடிக்கும்வரை, அவளுக்கு என்ன பிரச்சினை என்று கண்டுபிடிக்கும்வரை, அவர் அவளுடன் சிறிது நேரம் பேசினார். அவளுடைய ஆவியைக் கண்டறிந்தார், அதன்பின் தேவன் அவளுக்கு என்ன பிரச்சினை என்பதைக் காண்பித்தார், அதை அவர் அவளிடம் சொன்னார்.

அவர் கூறினார் - அவர், "போய், உன் புருஷனை அழைத்துக்கொண்டுவா" என்றார்.

அவள், "எனக்கு யாரும் இல்லை" என்றாள்.

அவர், "நீ சரியாய்ச் சொன்னாய், ஏனென்றால் உனக்கு ஐந்துபேர் இருந்தார்கள். இப்போது உனக்கு இருக்கிறவன் உன்னுடைய புருஷன் அல்ல. இதில் நீ சரியாய்ச் சொன்னாய்" என்றார்.



கழுத்தின் பின்புறத்தில் உள்ள முடிகளைச் சிலிர்க்கச் செய்யும் அளவுக்கு ஒரு ஜெபத்தை அந்த ஏழை, வயதான, பரிசுத்தமான பெண்மணி ஏறெடுத்தாள், அந்தப் பெரிய, கருமையான கன்னங்களில் கண்ணீர் வழிய, அவள் எவ்வாறு தேவனிடம் மன்றாடினாள் என்பதை கேட்பதற்கே அப்படி இருந்தது. "தேவனே, என் பிள்ளையை மரிக்க விட்டுவிடாதீர்கள். அவன் இரட்சிக்கப்பட்டுவிட்டான் என்று அவன் ஒரு முறை சொல்வதையாவது நான் கேட்கும்படி செய்யுங்கள். ஆண்டவரே, பின்பு நான்—நான்... அவனுடைய தாய் திருப்தியடைவாள்."

"தேவனே, அவளுடைய ஏழ்மையான, வயதான இருதயத்தை ஆசீர்வதியும்," என்று நான் நினைத்துக்கொண்டேன்.

அவள் எழுந்து தன் கண்களைத் துடைக்க ஆரம்பித்தாள். அவனுடைய பாதங்கள் குளிர்ந்தும் பிசுபிசுப்பாகவும் இருப்பதை நான் உணர்ந்தேன். அவன் தொடர்ந்து, "ஊ, ஊ!" என்று சத்தம் கொடுத்துக்கொண்டிருந்தான். "ஓ, மிகவும் இருட்டாக இருக்கிறது. ஊ," என்று அவன் சொன்னான்.

*19* ஆகவே நான் முழங்கால்படியிட்டு, அந்தப் பையனின் பாதங்களின் மீது என் கைகளை வைத்தேன். "நான் இப்போது ஜெபிக்கிறேன், அம்மா," என்று நான் சொன்னேன். மேலும் நான், "பரலோகப் பிதாவே, இங்கே நேரம் ஒன்பது மணிக்கு மேலாகிவிட்டது; விமானம் போய்விட்டது," என்று சொன்னேன். "எனக்கு ஒன்றும் தெரியாது. நீர் என்னை இங்கே வரும்படி சொன்னீர், எனக்குத் தெரிந்ததெல்லாம் நடந்து செல்வது மட்டும்தான். நீர் என்னை அனுப்பிய இடம் இதுதான் என்றால், நீர் இந்த ஜெபத்தைக் கேட்டு, இந்த ஏழைப் பெண்ணுக்காகப் பதிலளிப்பீர் என்று நான் ஜெபிக்கிறேன்," என்றேன்.

உங்களுக்கு என்ன தெரியுமா? அவன், "ஊ" என்று சத்தமிடத் தொடங்கினான். "அம்மா, ஓ அம்மா" என்றான். "அறையில் வெளிச்சம் வருகிறது," என்று அவன் கூறினான். அதிலிருந்து சுமார் ஐந்து நிமிடங்களில், அவன் படுக்கையில் உட்கார்ந்து, எங்களிடம் பேசிக் கொண்டிருந்தான்.



பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ஒரு ஆவியால் இயக்கப்படுகிறது. காண்கிறீர்களா? இப்போது, நான் உங்கள் சரீரத்தைக் கையாளுவதில்லை; நான் ஆவியைக் கையாளுகிறேன். எப்படின்னா- ஒரு கட்டியிலிருந்து உயிர் வெளியேறும்போது, நான் அந்த வளர்ச்சியடைந்த கட்டியைக் கையாளுவதில்லை; அந்த வளர்ச்சியில் உள்ள உயிரையே நான் கையாளுகிறேன். அது அதைக் கொண்டிருக்கும் நபரிடமிருந்து வேறுபட்ட ஒரு தனி உயிராகும். அல்லது ஒரு புற்றுநோய், அல்லது ஒரு கண்புரை, அல்லது அது எந்த வியாதியாக இருந்தாலும்...

*37* இப்போது, நாம் நம் வாழ்வில் இதற்கு முன் சந்திக்காத இரு மனிதர்களாக, ஒருவருக் கொருவர் முற்றிலும் அறிமுகமில்லாதவர்களாக இங்கே நின்று கொண்டிருக்கிறோம். நீங்கள் ஒரு ஸ்திரீயாக இங்கே நிற்கிறீர்கள், நான் ஒரு புருஷனாக நிற்கிறேன். ஒரு மிக அழகான படம், இன்றிரவு நாம் தொடங்குவதற்கு, நமது கர்த்தராகிய இயேசுவும் (அவருடைய இடத்தை எடுத்துக்கொள்வதற்காக அல்ல, ஆனால் அவர் இங்கே இருக்கிறார் என்ற அர்த்தத்தில் சொல்கிறேன். காண்கிறீர்களா?) - சமாரியா

ஒருவரையும் எனக்குத் தெரியாது. இன்றிரவு இந்தக் கூட்டத்தில் எனக்குத் தெரிந்தவர்கள் என்று பரலோகத்திலிருக்கும் தேவன் அறிவார், இங்கே இருக்கும் என் மகனைத் தவிர, நான் அறிமுகப்படுத்தியவர்கள் மட்டுமே. அவ்வளவு தான்-அவர்களை மட்டுமே எனக்குத் தெரியும். ஆனால் இப்போது, தேவன் உங்கள் ஒவ்வொரு வரையும் அறிந்திருக்கிறார். இப்போது, இயற்கைக்கு அப்பாற்பட்ட மண்டலத்திலே, கர்த்தர் தமது ஆசீர்வாதங்களை அருளுவாராக என்பதே என் ஜெபம்.

இப்போது சகோதரி, நீங்கள்... நான்... மற்றவர்களின் பார்வையிலிருந்து உங்களைத் தள்ளி வைக்கும்படியாக, உங்களால் முடிந்தால், இந்தப் பக்கமாக சற்று அருகில் வாருங்கள். நீங்கள் ஒரு-நீங்கள் ஒரு மனிதராக இருக்கிறீர்கள், ஆனாலும், நீங்கள் ஒரு ஆவியாகவும் இருக்கிறீர்கள். உங்களுக்கு ஆவி இல்லை என்றால், நீங்கள் மரித்துப் போயிருப்பீர்கள். காண்கிறீர்களா? எனவே ஒவ்வொரு முறையும், ஒரு ஆட்டோமொபைல் சாலையில் செல்வதை நீங்கள் காணும்போது, அந்த ஆட்டோமொபைல் ஒரு சரீரத்தில்



நான் அவசரமாக வெளியே வந்து, ஒரு வாடகை காரை அழைத்துக்கொண்டு, விடுதிக்குத் திரும்பினேன். உங்களுக்கு என்ன தெரியுமா? என்... எடுத்த பின்பு, நான் மிகவும் வேகமாக விமான நிலையத்திற்கு விரைந்து சென்றேன். விமானம் அப்போதுதான் தன்னுடைய முதல் அறிவிப்பைச் செய்து கொண்டிருந்தது. தேவன், அந்த ஏழை, படிக்காத, கருப்பினப் பெண்ணுக்காக, அந்த விமானத்தைப் புறப்படவிடாமல் நிறுத்தி, அவளுடைய ஜெபத்திற்குப் பதில் கிடைக்கும் வரை அதை அங்கேயே தடுத்துவைத்தார். நான் உங்களுக்குச் சொல்கிறேன், தேவன் தம்முடைய இறையாண்மையுள்ள கிருபையில்; அவர் தேவனாகவே இருக்கிறார். ஓ, ஆச்சரியம். இன்று இரவு அதுபோன்று ஆயிரக்கணக்கான காரியங்களைச் சொல்ல முடியும். அந்த ஏழை, அறியாமையுள்ள கருப்பினப் பெண்ணுக்காக, அவர் ஒரு புயலின் மத்தியில் ஒரு விமானத்தை நிறுத்தி, புறப்படவிடாமல் அதை அங்கேயே தடுத்துவைத்தார்.

20 அதிலிருந்து சுமார் ஆறு மாதங்களுக்குப் பிறகு, நான் அரிசோனாவிலுள்ள பீனிக்ஸ்

நகருக்குத் திரும்பிக் கொண்டிருந்தேன், நான் ஒரு ரயிலில் இருந்தேன். நான் மெம்பிஸில் வந்திறங்கினேன். உங்களில் யாராவது மெம்பிஸிலிருந்து வந்திருந்தால், மேற்கு நோக்கிச் செல்லும்போது ரயில் எப்படி வரும் என்பது உங்களுக்குத் தெரியும். நான் வெளியே இறங்கி, சாப்பிடுவதற்கு ஏதாவது வாங்கிக் கொள்வதற்காக அந்த வழியில் நடக்கத் தொடங்கினேன். ரயிலில் சாப்பிடுவது எனக்கு மிகவும் விலை உயர்ந்ததாக இருந்ததால், அந்தச் சிறிய கடையில் எனக்கொரு ஹாம்பர்கர் வாங்குவதற்காக நான் அங்கே நடந்தேன். நான் வெளியே வந்தபோது, சுமை தூக்கும் கூலியாள் ஓடி வந்து, "வணக்கம், போதகர் பிரன்ஹாம்," என்று சொல்வதைக் கேட்டேன்.

நான், "காலை வணக்கம்" என்றேன்.

அவர், "உங்களுக்கு என்னைத் தெரியவில்லையா?" என்று கேட்டார்.

"இல்லை, எனக்குத் தெரிந்திருப்பதாகத் தெரியவில்லை," என்று நான் சொன்னேன்.



*36* இப்போது, உங்கள்—உங்கள் விசுவாசமே வரத்தை செயல்படுத்துகிறது. அந்த ஸ்திரீ அவருடைய வஸ்திரத்தைத் தொட்டாள்; இயேசு ஒருபோதும், "ஓ, நான்-நான்..." என்று சொல்லவில்லை. இல்லை, "உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது" என்று சொன்னார். காண்கிறீர்களா? உங்கள் விசுவாசமே அதைச் செய்கிறது. அவளுடைய விசுவாசமே அதைச் செய்தது, உங்கள் விசுவாசமே அதைச் செய்கிறது.

இப்போது, இங்கே இருக்கும் இந்த ஸ்திரீக்கு, அவள்... தேவன் அவளிடம் ஒரு வார்த்தைகூட சொல்லாமல் இருக்கலாம். இப்போது, யாராவது இருக்கிறீர்களா... இங்கே அந்த வரிசையில் நிற்கும் ஒவ்வொருவரும், இங்கே நிற்கும் நீங்கள் எனக்கு அறிமுகமில்லாதவர்களா? அப்படியானால், உங்கள் கைகளை உயர்த்துங்கள், எனக்கு அறிமுகமில்லாத ஒவ்வொருவரும். வரிசையின் இறுதி வரை உள்ள அனைவரும். அங்கே எனக்கு அறிமுகமில்லாதவர்கள் எத்தனை பேர் இருக்கிறீர்கள்? எங்கும் உள்ளவர்கள் உங்கள் கைகளை உயர்த்துவோம். இப்போது, உங்களில்

எப்போதாவது பார்த்திருக்கிறீர்களா என்று யாரிடமாவது கேளுங்கள்.

ஆனால் இப்போது, நீங்களே, நீங்கள் கிறிஸ்தவர்கள், நீங்கள் அந்த வரத்தை வெளியே இழுக்கிறீர்கள். காண்கிறீர்களா? அது நான் அல்ல; உங்கள் விசுவாசம்தான் அதைச் செய்கிறது. உங்களுக்கு விசுவாசம் இல்லை என்றால், ஒன்றும் செய்ய முடியாது. உங்கள் விசுவாசமே அந்த வரத்தை செயல்படுத்துகிறது. கிறிஸ்து இங்கே பூமியில் இருந்தபோது அவர் இருந்ததைப் போலவே... எனக்கு அருளப்பட்ட இந்தச் சிறிய வரம், இங்குள்ள பெருங்கடலிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு சிறிய ஸ்பூன் அளவைப் போன்றது. மேலும் கிறிஸ்து முழு பெருங்கடலைப் போன்றவர். ஆனால் நினைவில் கொள்ளுங்கள், அந்த ஸ்பூனில் உள்ள அதே ரசாயனங்கள்தான் அந்த முழு கடலிலும் இருக்கின்றன. காண்கிறீர்களா? ஆனால் அவ்வளவு அளவாக அது இல்லை. காண்கிறீர்களா? எனவே இது ஒரு... அப்படித்தான்-அப்படித்தான் தேவனுடைய வரம் இருக்கிறது.



அவர், "கர்த்தரால் நடத்தப்பட்டு, இறந்து கொண்டிருந்த ஒரு பையனுக்காக அன்று காலை நீங்கள் வந்து ஜெபித்தீர்களே, நினைவிருக்கிறதா?" என்று கேட்டார்.

"அது நீங்கள் இல்லை," என்று நான் சொன்னேன்.

21 அவர், "ஆம்," என்றார், "உங்களுக்குத் தெரியுமா, எனக்கு இப்போது எந்த வியாதியும் இல்லை," என்றார். மேலும், "நான் இப்போது ஒரு கிறிஸ்தவன், போதகர் பிரன்ஹாம்," என்று சொன்னார். ஆமென். ஓ, ஆச்சரியம். "நான் இப்போது ஒரு கிறிஸ்தவன்."

*ஆச்சரிய கிருபை! அந்தச் சத்தம் எவ்வளவு இனிமையானது,*

*என்னைப்போன்ற ஒரு நிர்ப்பாக்கியவானை அது இரட்சித்தது,*

*ஒரு காலத்தில் நான் காணாமற்போயிருந்தேன், ஆனால் இப்போது நான் கண்டடையப்பட்டேன்,*

*குருடனாக இருந்தேன், ஆனால் இப்போது நான் காண்கிறேன்.*

*என் இருதயத்திற்குப் பயப்படக் கற்றுக்கொடுத்தது கிருபைதான்,*

*என் பயங்களைப் போக்கியதும் கிருபைதான்,*

*நான் முதன்முதலில் விசுவாசித்த அந்த நேரத்தில்,*

*அந்தக் கிருபை எவ்வளவு விலையேறப்பெற்றதாகத் தோன்றியது.*

ஆமென்! நாம் ஜெபிப்போமா.

*22* பரலோகப் பிதாவே, வாழ்க்கையின் வாசல்களைக் கடந்து, மறுபுறம் சென்ற பிறகு, யாப்பேத்தின் மக்கள், காமின் மக்கள், சேமின் மக்கள் என அனைவரும் சிங்காசனத்தைச் சுற்றி கூடியிருப்பதைப் பார்ப்பது, ஒரு நாளில் எப்படி இருக்கும் என்று நான் நினைத்துப் பார்க்கிறேன். அல்லேலூயா. பின்பு அவருடைய பிரசன்னத்தில் அமர்ந்திருப்பது, பரதீசின் வீதிகளில் அங்கும் இங்கும் நடப்பது, மேலும் இந்த பூமியில் நாம் சந்திக்கும் பாக்கியம் பெற்ற இந்த அன்பான



இல்லாமல் இங்கே வருவதற்கு வழியில்லாதவர்கள், இயேசு கிறிஸ்து உங்களைக் குணமாக்க வேண்டும் என்று விரும்புபவர்கள், உங்கள் கைகளை உயர்த்துவீர்களா? சுற்றிலும் பாருங்கள்.

*35* இப்போது நான் இதைச் சொல்கிறேன், அவர் தமது அபிஷேக வல்லமையிலே வந்தால்... காண்கிறீர்களா? இது இல்லை... இப்போது, இதை நான் செய்வதில்லை. இதில் நான் செய்யக்கூடியது ஒன்றுமில்லை. நீங்கள்தான் அதைச் செய்கிறீர்கள். உங்கள் விசுவாசம்தான் அதைச் செய்கிறது. இது வெறும் ஒரு வரம்தான். தேவன் எனக்கு ஒரு தரிசனத்தைக் காண்பிக்க விரும்பும்போது, அவர் வெறுமனே கீழே வந்து என்னை எடுத்துக்கொண்டு, முழு காரியத்தையும், அது எப்படி இருக்கப்போகிறது என்பதையும் எனக்குக் காண்பிக்கிறார்; பின்பு நான் வந்து மக்களிடம் சொல்கிறேன், அது அப்படியே நடக்கிறது. அது ஒருபோதும் தவறியதில்லை. எனக்கு நாற்பத்தி ஆறு வயதாகிறது; அது ஒருமுறைகூட தவறியதில்லை. நீங்கள்

வாருங்கள். கவனியுங்கள், யாராவது ஒருவேளை எழும்ப முடியாமல் இருக்கலாம், அல்லது யாராவது கண் தெரியாதவர்களாக உள்ளே வர முடியாமல் இருக்கலாம், அல்லது காது கேளாதவர்களாக கேட்க முடியாமல் இருக்கலாம். நாங்கள் ஊழியம் செய்யும்போது, உங்கள் அருகில் உள்ளவர்களின் அட்டையைச் சுற்றிலும் பாருங்கள். உங்களிடம் இருக்கிறதா? அது நல்லது. சரி. அது—அது மிகவும் நன்று. சரி. ஜெப அட்டை R-100. அது மிகவும் நன்று. சரி. சிறுவர்களே, இப்போது எல்லாம் சரியாகிவிட்டதா? அனைத்தும், எல்லாம் சரிதானா? சரி. உங்கள் வியாதியஸ்தர்களைக் கொண்டு வாருங்கள்.

ஓ தேவனே, இரக்கமாயிரும்.

இப்போது, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே, தேவனுடைய மகிமைக்காக இங்குள்ள ஒவ்வொரு ஆவியையும் என் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருகிறேன்.

ஜெப அட்டைகள் இல்லாமல் அங்கே இருக்கும் உங்களுக்கு, ஜெப அட்டைகள்



மக்களைச் சந்தித்து, இந்த கதையை நாம் எப்படிச் சொல்வோம் என்பதை நினைத்துப் பார்க்கிறேன். ஓ, அது எப்பேர்ப்பட்ட ஒரு காலமாய் இருக்கும்.

அறுப்பு முதிர்ந்திருக்கிறது, ஆண்டவரே, தாமதமாகிறது; சூரியன் அஸ்தமித்துக் கொண்டிருக்கிறது; நேரம் முடிந்து கொண்டி ருக்கிறது. நாம் இப்போதே சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க வேண்டும், வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்க வேண்டும், கர்த்தருடைய பலிபீடத்திற்கு அழைக்க வேண்டும், அவைகளை விரிவாகத் திறந்துவிட்டு பாவிகள் உள்ளே ஓடி வந்து இரட்சிக்கப்பட அனுமதிக்க வேண்டும். ஏனென்றால், இப்போது வேலை செய்வதற்கு நமக்கு அதிக நேரம் இல்லை. தாமதமாகிவிட்டது.

இப்போது, பரலோகப் பிதாவே, எங்கள் சகோதரருடைய செய்தியின் மூலமாக எங்களுக்குக் கொண்டுவரப்பட்ட ஆசீர்வாதத் திற்காக இன்றிரவு நாங்கள் உமக்கு நன்றி செலுத்துகிறோம். அது ஒவ்வொரு இருதயத்

திலும் ஆழமாகப் பதியும்படி செய்ய வேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம்.

*23* மேலும் இப்போது, நாங்கள் ஜெப வரிசையை அழைக்கும்போது, பரலோகப் பிதாவே, உமது இரக்கத்திலும் கிருபையிலும், நீர் இன்றிரவு ஏதாவது ஒன்றை மிகவும் அதிகமாகவும், பரிபூரணமாகவும் செய்யும்படி நான் உம்மை வேண்டிக்கொள்கிறேன். மேலும் உமது ஆசீர்வாதங்களின் ஒரு பெரிய ஊற்றுதலை எங்களுக்குத் தாரும். அவிசுவாசிகளாக இருக்கிற அனைவரும் இன்றிரவு விசுவாசிகளாக மாறட்டும். பின்மாற்றமடைந்தவர்கள் இரட்சிக்கப்படட்டும், பரிசுத்த ஆவியானவர் இல்லாதவர்கள் தேவனுடைய ஆவியால் மறுபடியும் பிறக்கட்டும், ஒவ்வொரு வியாதியஸ்தரும் குணமடையட்டும். ஏனென்றால் அவருடைய நாமத்தில் இதை நாங்கள் கேட்கிறோம். ஆமென்.

ஓ, அவர் எவ்வளவு அற்புதமானவர். "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள்



சமுத்திரம் பயந்து பின்வாங்கியது, இஸ்ரவேலர் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குச் சென்றார்கள்" என்று எழுத்தாளர் கூறினார்.

தேவனே, இந்தக் கைக்குட்டைகள் வியாதியஸ்தர்கள் மீது வைக்கப்படும்போது, தேவனுடைய அந்தக் கண்கள் இன்றிரவு இயேசுவின் இரத்தத்தின் வழியாகக் கீழே நோக்குவதாக. இந்தக் கைக்குட்டைகள் குறிக்கிற அந்த வியாதியுள்ள மக்களைக் கட்டியிருக்கிற சத்துரு பயந்து, பின்வாங்குவானாக, மக்கள் நல்ல ஆரோக்கியத்துடனும், பெலத்துடனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தை நோக்கி முன்னேறிச் செல்வார்களாக. ஏனெனில் சுவிசேஷத்தினாலும் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் இது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டுள்ளது. இதை அவருடைய நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.

*34* சரி. இப்போது அனைத்தையும் பெற்றுக்கொண்டீர்களா? என்ன சொல்கிறீர்கள்? 100-ஐ தவிர அனைத்தும், எண் 100. யாரிடமாவது R-100 என்ற ஜெப அட்டை இருந்தால், அவர்களை வரிசைக்குக் கொண்டு

அவைகள் வியாதியுள்ளவர்களுக்கும் பாதிக்கப் பட்டவர்களுக்கும் அனுப்பப்பட்டன, அவர்கள் குணமாக்கப்பட்டார்கள்.

*33* இப்போது, பிதாவே, நாங்கள் பரிசுத்த பவுல் அல்ல என்பதை நாங்கள் அறிவோம், ஆனால் நீர் இன்னமும் இயேசுவாகவே இருக்கிறீர் என்பதை நாங்கள் அறிவோம். அது பரிசுத்த பவுல் அல்லவே அல்ல; ஆண்டவரே, அது நீர்தான், உமது ஊழியக்காரர் மீது மக்கள் வைத்த விசுவாசம் தான் அது. இப்போதும் ஆண்டவரே, இந்தக் கைக்குட்டைகளை நாங்கள் ஆசீர்வதிக்கிறோம். தேவன் இந்த வாக்குத் தத்தத்தைக் கொடுத்தபோது எப்படி இருந்ததோ, அதேபோல இவை வியாதியஸ்தர்களின் சரீரங்களின் மேல் வைக்கப்படும்போது நடப்பதாக. இது மனிதனுடைய வாக்குத்தத்தம் அல்ல; இது தேவனுடைய வாக்குத்தத்தம்.

ஒரு சமயம் சிவந்த சமுத்திரம் இஸ்ரவேலரை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குச் செல்லவிடாமல் தடுத்தபோது, "தேவன் அந்த அக்கினி ஸ்தம்பத்தின் வழியாகக் கோபக் கண்களோடு கீழே நோக்கினார், சிவந்த



மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவு மில்லை," என்பதில் ஆச்சரியமில்லை. மேலும் இப்போது, நான்—நான் நினைக்கிறேன், இன்னும் மூன்று இரவுகள் மட்டுமே இருக்கின்றன, இன்றிரவுக்குப் பிறகு இந்த அன்பான மக்களை விட்டு நான் செல்ல வேண்டும்.

சற்று முன்புதான், ஆஸ்திரேலியாவின் சிட்னியிலிருந்து, உடனே அங்கே வரும்படி எனக்கொரு அழைப்பு வந்தது. நான்... [சகோதரர் பிரன்ஹாம் தன் தொண்டையைச் செருமுகிறார்] ஆனால், உங்களுக்குத் தெரியுமா, நான் எப்போதாவது திரும்பி வந்து எழுப்புதலுக்காக ஒரு மாதம் தங்கியிருந்து, பிரசங்கித்து, அப்படியே முன்னேறிச் செல்ல விரும்புகிறேன்.

*24* இப்போது, இங்கே ஒரு கட்டு ஜெப அட்டைகள் இருக்கின்றன. நான் நம்புகிறேன்... பில்லி எங்கே? அது என்ன... எங்கே... ஓ, இங்கே, R-ஆ? சரி, இன்றிரவு நாம் R என்ற ஜெப அட்டையை விநியோகித்திருக்கிறோம்.

உங்கள் சிறிய அட்டையைப் பாருங்கள்; அது ஒரு சிறிய அட்டைதான்.

அப்படியே, நேற்று மாலை இந்தக் கைக்குட்டைகளுக்காக நான் ஜெபிக்கவில்லை, இன்றிரவு நான் அதைச் செய்ய விரும்புகிறேன். அதன்பிறகு, ஒருவேளை நாளை இரவு நமக்கு அதிக நேரம் கிடைக்கும்போது, இவைகளை என்ன செய்வது, ஒரு இடத்திற்கு எப்படி அனுப்பி அவற்றைப் பெற்றுக்கொள்வது என்பதைக் குறித்து உங்களுக்குச் சொல்வேன்.

இப்போது, இது இங்கே இருப்பதைப் போன்ற ஒரு சிறிய அட்டை. அதனுடைய பின்பக்கத்தில் R என்று இருக்கும். மேலும், அது ஒன்று முதல் நூறு வரை இருக்கும். இப்போது, அவர்கள் அனைவரையும் இங்கே மேடைக்குக் கொண்டு வர முடியாது; கொண்டு வர முடியும் என்றே நான் விரும்புகிறேன். அது தேவனுக்குத் தெரியும். ஆனால் என்னால் முடியாது.

மேலும் மேலே வருகிற எவரும், குணமடைவார்கள் என்று அர்த்தமல்ல. அது வெறும்... இப்போது இது ஒரு கண்காட்சி



*32* இப்போது, நாம் தொடங்குவதற்கு முன்பாக, இந்த கைக்குட்டைகளுக்காக. பரலோகப் பிதாவே, வியாதியுள்ள, தேவையிலிருக்கும் மக்களுக்காக இந்த கைக்குட்டைகள் இங்கே வைக்கப்பட்டிருக்கின்றன; ஒருவேளை ஏதாவது ஒரு சிறு குடிசையிலே வயதான தாயோ, தந்தையோ கண் தெரியாமல், தரையைக்கூட பார்க்க முடியாமல் இன்றிரவு படுத்திருக்கலாம்; இந்த கைக்குட்டை வருவதற்காக அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சில தாய்மார்கள் தங்கள் குழந்தையை கைகளில் ஏந்திக்கொண்டு இந்த கைக்குட்டை திரும்பி வருவதற்காகக் காத்திருந்து தரையில் நடந்து கொண்டிருக்கலாம்... தேவனே, இதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர். இப்போது, அவர்கள் அவைகளை என்னிடம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இப்போது, வேதாகம நாட்களிலே, பரிசுத்த பவுல் உமது ஊழியக்காரர் என்பதை அவர்கள் அறிந்திருந்ததினால், அவருடைய சரீரத்திலிருந்து கொண்டு வரப்பட்ட கைக்குட்டைகளையும் கச்சைகளையும் அவரிடம் கொண்டு வந்தார்கள்.

இங்கே இருக்கிறார், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்த அதே கர்த்தராகிய இயேசு, தாம் திரும்ப வரும்வரைக்கும் தமது சபையில் செய்வதாக வாக்களித்தபடியே இப்போதும் அதே காரியங்களைச் செய்கிறார் என்றும் இந்த மக்கள் அறிந்துகொள்வார்களாக.

எங்களுடைய அநேக பாவங்களை மன்னித்தருளும். மேலும், ஆண்டவரே, கல்வாரியை நோக்கி எங்கள் முகங்களைத் திருப்புகிற இந்த இரவிலே எங்களுக்கு உதவி செய்யும். தேவனுடைய தூதனானவர் வந்து உமது அடியேனை அபிஷேகம் செய்து, இங்குள்ள ஒவ்வொரு அடியாரையும் அபிஷேகம் செய்வாராக. நீர் எனக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிற காரியங்களைப் பேசுவதற்கும் காண்பதற்கும் என் உதடுகள் விருத்தசேதனம் செய்யப்படவும், என் கண்கள் விருத்தசேதனம் செய்யப்படவும் கிருபை செய்யும். அதைப் பெற்றுக்கொள்ளும்படி ஒவ்வொரு இருதயமும் காதும் விருத்தசேதனம் செய்யப்படுவதாக. இதை இயேசுவின் நாமத்தில் கேட்கிறோம். ஆமென்.



அல்ல. இது ஒரு மேடை கண்காட்சியும் அல்ல. இது ஒரு ஆவிக்குரிய கூட்டம் (பார்க்கிறீர்களா?), பரிசுத்த ஆவியானவர்... ஆனால் இது சர்வ வல்லமையும் சர்வ ஞானமும் கொண்ட தேவனுடைய பிரசன்னத்தின் நிரூபணமாக இருக்கிறது, அது அவருடைய பிரசன்னத்தில் இருந்து, அவர் செய்த அதே காரியத்தைச் செய்கிறது.

முதன்முறையாகப் புதிதாக வந்தவர்கள் யாராவது இங்கே இருக்கிறீர்களா? பார்க்கலாம். ஆச்சரியம், பாருங்கள். அதுதான்... பாருங்கள், ஒவ்வொரு இரவும் அது எப்படிக் கர்த்தராகிய இயேசு... என்று விளக்கப்பட வேண்டும்.

*25* இதை நாம் அழைப்பதற்கு முன்பு, நான் ஒரு வேதப்பகுதியை வாசிக்கிறேன், ஒரு நிமிடம். இதோ இங்கே ஒன்று இருக்கிறது, நேராக அதைத் திருப்பினேன். பரிசுத்த யோவான் *5*-ம் அதிகாரத்தில், *33*-ம் வசனத்திலிருந்து தொடங்குவோம்:

**நீங்கள் யோவானிடத்தில் ஆளனுப்பி விசாரித்தீர்கள், அவன் சத்தியத்திற்கு சாட்சி கொடுத்தான்.**

**நான் ஏற்றுக்கொள்ளுகிற சாட்சி மனுஷருடைய சாட்சியல்ல, நீங்கள் இரட்சிக்கப்படுவதற்காகவே இவைகளைச் சொல்லுகிறேன்.**

**அவன் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான்; நீங்களும் சிலகாலம் அவன் வெளிச்சத்திலே களிகூர மனதாயிருந்தீர்கள்.**

**யோவானுடைய சாட்சியைப்பார்க்கிலும் மேன்மையான சாட்சி எனக்கு உண்டு; அதென்னவெனில், நான் நிறைவேற்றும்படிக்குப் பிதாவானவர் எனக்குக் கற்பித்ததும் நான் செய்துவருகிறதுமான கிரியைகளே பிதா என்னை அனுப்பினார் என்று என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறது.**

**என்னை அனுப்பின பிதா தாமே என்னைக் குறித்துச் சாட்சி கொடுத்திருக்கிறார்;**

*26* இப்போது, அதைப் பற்றி யோசித்துப் பாருங்கள், இயேசு இந்த பூமியில் இருந்தபோது என்ன செய்தார்? அவர் இந்த பூமியில் இருந்தபோது அவர் செய்ததை, அவர் செய்திருந்தால்... அவர் நம்மை இரட்சிப்பதற்காக மரித்தார், பின்னர் ஆவியின் ரூபத்தில்



பட்ட விசுவாசத்திற்காக அவர்கள் போராடினார்கள். இந்த நாள் வருவதை தாங்கள் உயிருடன் இருந்து பார்ப்போம் என்று அவர்கள் விசுவாசித்தார்கள். அவர்களின் பிதாக்கள் மற்றும் தாய்மார்களில் அநேகர் இந்த நாளுக்காகக் காத்திருந்து நித்திரையடைந்துவிட்டார்கள். ஆனால், பிதாவே, அவர்கள் வழியை அமைத்துவிட்டார்கள். அவர்கள் முட்டுக்கட்டைகளை அகற்றி, முட்செடிகளைப் பிடுங்கி எறிந்துவிட்டார்கள். இப்போது, அவர்களுடைய பிள்ளைகள் இந்த ஆசீர்வாதங்களை அனுபவித்துக்கொண்டு, நெடுஞ்சாலையில் மகிழ்ச்சியுடன் ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

*31* இப்போது, பரலோகப் பிதாவே, இன்றிரவு நீர் வரவேண்டும் என்று நாங்கள் ஜெபிக்கிறோம். மகா பெரிய யெகோவா தேவனே, கர்த்தராகிய இயேசுவை இன்றிரவு அனுப்பியருளும். மேலும், அவர் தமது உயிர்த்தெழுதலின் வல்லமையில் இப்போது அசைவாடி, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்பதை வெளிப்படுத்துவாராக; அதினால், எங்கள் விசுவாசம் வீணானதல்ல, எங்கள் நம்பிக்கை வீணானதல்ல என்றும், அவர்

சரி. அப்படி அவர்கள் இருந்தால், யாராவது அதை வைத்திருப்பதை நீங்கள் பார்த்தால், ஒரு வரவேற்பாளரிடம் சொல்லுங்கள், அது ஒரு செவிடராக இருந்தால், யாரையாவது உதவிக்கு அழைத்து வரட்டும். அது... நன்றி, சகோதரர் தாம், அது நல்லது...?.. சரி. இப்போது, நீங்கள் விரும்பினால், ஒரு நிமிடம் நாம் ஜெபிப்போம்.

*30* பரலோகப் பிதாவே, இப்போது உமது ஆசீர்வாதத்திற்காக எங்கள் மீது கண்ணோக் கமாயிரும், ஆண்டவரே. எங்கள் பாவங்களை மன்னிக்கும்படி நாங்கள் உம்மிடம் கேட்கிறோம். ஆண்டவரே, ஒரு பெரிய நாடகம் இப்போது அமைக்கப்பட்டிருக்கிறது. நீர் வருவதற்காக நாங்கள் காத்திருக்கிறோம். தேவனாகிய கர்த்தாவே, இங்கே கிறிஸ்தவ மக்கள் இருக்கிறார்கள், உமக்காக இன்றிரவு தங்கள் ஜீவனையும் தடையின்றி அர்ப்பணிக் கக்கூடிய மக்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்கள் உம்மை நேசிக்கிறார்கள். அவர்கள் மிகுந்த பிரயாசங்கள், பிரச்சனைகள் மற்றும் உபத்திரவங்கள் வழியாக வந்திருக்கிறார்கள். பல ஆண்டுகளாக அவர்கள் முயற்சித்தார்கள். பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்



திரும்பி வந்தார். அவர் நேற்றும், இன்றும், என்றென்றைக்கும் மாறாதவராகவே இருக்கிறார். தான் ஒரு குணமாக்குகிறவர் என்று அவர் உரிமை கொண்டாடவில்லை; பிதா தமக்குத் தரிசனத்தின் மூலம் காண்பித்ததை மட்டுமே தம்மால் செய்ய முடியும் என்று உரிமை கொண்டாடினார். அதுதான் சத்தியம் என்று வேதாகமம் வாசிக்கும் எத்தனை பேருக்குத் தெரியும்? வே-வேதாகமம்? அது நல்லது. புரிகிறதா?

பரிசுத்த யோவான் *5:24*-ல் இயேசு கூறினார்.

**மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்...**

முடவர்கள், சப்பாணிகள், குருடர்கள் மற்றும் சூம்பின உறுப்புடையவர்கள் போன்ற ஒரு பெரிய திரளான மக்களைக் கடந்துசென்ற பிறகு, ஒரு படுக்கையின் மேல் படுத்திருந்த ஒரு மனுஷனை அவர் குணமாக்கினார், ஒருவேளை அவருக்குப் புரோஸ்டேட் பிரச்சனையோ அல்லது வேறேதோ இருந்திருக்கலாம். எனக்குத் தெரியாது. ஏதோ ஒன்று, அது முடக்கியிருந்தது; முப்பத்தெட்டு

வருடங்களாக அவருக்கு அது இருந்தது. அது அவரைக் கொல்லப்போவதில்லை. ஆனால் தேவன் அவரை அந்த நபரிடம் செல்லும்படிக் காட்டியிருந்ததால், அவர் அவரைக் குணமாக் கினார். வேதவாக்கியங்கள் அதைத் தெளிவாகக் கூறுகின்றன. மேலும் அவர் எங்கிருக்கிறார் என்பது தமக்குத் தெரியும் என்றும், இந்த முழு நேரமும் அவர் இந்த நிலைமையில் இருந்திருக்கிறார் என்பதை அறிந்திருந்தார் என்றும் அவர் சொன்னார்; பின்பு அந்தத் திரளான மக்களை விட்டுவிட்டு நடந்து சென்றுவிட்டார்.

அவர் கேள்வி கேட்கப்பட்டார். அப்போது தான் அவர், "மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்ய மாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார்" என்று சொன்னார்.

27 பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு, தான் மேசியாவைக் கண்டுபிடித்துவிட்டதாக



இப்போது, கர்த்தர் ஆசீர்வதித்து, தம்முடைய ஆசீர்வாதங்களை மக்களுக்குக் கூட்டியருளும்போது, அவருடைய மகத்துவமான பிரசன்னம் நம்மோடிருப்பதாக. இப்போது, சகோதரர்கள் சிலர், அதாவது வரவேற்பாளர்கள், அங்கே கொஞ்சம் உதவி செய்தால்... உனக்கு எல்லா அட்டைகளும் கிடைத்துவிட்டதா, பில்லி? இல்லை. சரி.

அந்த ஜெப அட்டைகளைச் சுற்றிலும் பாருங்கள்; சுற்றிலும் பாருங்கள்; தேடிப் பாருங்கள். சகோதரர்களே, உங்களில் சிலர் இங்கே இந்த அட்டைகளில் சிலவற்றைப் பார்க்க உதவுங்கள், தேடிப் பாருங்கள்—எங்கே என்று பாருங்கள்... இங்கே சுற்றிலும் பாருங்கள்; அந்த-அந்த நடைபாதைகளில் சுற்றிலும் பார்த்து கண்டுபிடியுங்கள்.

75. அது... உங்களிடம் ஒன்று இருக்கிறதா, ஐயா? 75 முதல் 100 வரை, 75 முதல் 100 வரை. ஆம், நாம் அவர்களை உள்ளே கொண்டுவர வேண்டும், ஏனென்றால் அவர்கள் செவிடராகவோ அல்லது வேறு ஏதாவது நிலையிலோ இருக்கலாம், நம்மால் முடியாது...

உங்கள் கையை உயர்த்துவீர்களா? 98, 98 வைத்திருக்கிறவர் எவரோ, தயவுசெய்து உங்கள் கையை உயர்த்துவீர்களா. என்னை மன்னியுங்கள். 98, 99, ஜெப அட்டை 99 யாரிடம் இருக்கிறது? உங்கள் கையை உயர்த்துவீர்களா? அங்கே இருக்கும் பெண்மணி, 99. 100, ஜெப அட்டை 100 யாரிடம் இருக்கிறது? உங்கள் கையை உயர்த்துவீர்களா? ஜெப அட்டை 100.

29 சுற்றிலும் பாருங்கள். ஒருவேளை யாராவது எழுந்திருக்க முடியாதவர்களாக இருக்கலாம். ஒருவேளை யாராவது செவிடராக இருக்கலாம், மேலும்—மேலும் அப்படி இருந்தால்... சரி. ஜெப அட்டை 100, 100 வைத்திருப்பவர் எவரோ... சொல்லப்போனால், இங்கே ஒரு முழு குழுவே எனக்குக் கிடைத்திருக்கிறது, இல்லையா? நான் அவர்களைச் சந்திக்க முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை, ஆனால் என் முழு இருதயத்தோடு நான் சிறந்த முறையில் முயற்சி செய்வேன். சரி.



நினைத்து, அதை அவனுக்குக் காண்பிப்பதற்காக அவனைத் திரும்ப அழைத்து வந்தான். அவன் அந்த மக்கள் கூட்டத்திற்குள் நடந்து வந்தபோது, இயேசு அவனைப் பார்த்து, "இதோ, கபடற்ற உத்தம இஸ்ரவேலன்" என்று சொன்னார்.

"ரபீ, நீர் என்னை எப்போது அறிவீர்?" என்று அவன் கேட்டான்.

"பிலிப்பு உன்னை அழைக்கிறதற்குமுன்னே, நீ மரத்தின் கீழிருக்கும்போது உன்னைக் கண்டேன்," என்று அவர் கூறினார்.

அதற்கு அவன், "நீர் தேவனுடைய குமாரன், நீர் இஸ்ரவேலின் ராஜா" என்றான்.

கிணற்றருகில் இருந்த அந்தப் பெண்ணிடமும் அவர் அப்படித்தான் செய்தார்; அவளுடைய பாவங்கள் என்ன என்பதையும் மற்ற காரியங்களையும் அவர் அவளுக்குச் சொன்னார். அவர் இன்றிரவும் அதே கர்த்தராகிய இயேசுவாக இருக்கிறார். நான் அதை விசுவாசிக்கிறேன். மேலும் இப்போது, சகோதரர் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அவர் அப்படியே

இருக்கிறார் என்று அறிவிக்கிறார். இப்போது, அவர் தம்முடைய மகத்துவமான ஆசீர்வா தங்களில் வந்து, நம்மைச் சுற்றி வந்து, அவர் மரித்தோரிலிருந்து எழுந்துவிட்டார் என்று அதே காரியத்தை அறிவிப்பார் என்றால், நாமெல் லாரும் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் அப்படி நினைக்கவில்லையா? மேலும் அனைவரும் அவரை ஆராதிக்க வேண்டும்.

28 பரவாயில்லை, உங்களில் அநேகர் அநேகமாக மேலே அழைக்கப்படலாம். பார்க்கலாம், நாம் எங்காவது தொடங்குவோம்... இப்போது அது என்ன? அந்த எழுத்து என்ன? R-கள், R. சரி. என்னை மன்னியுங்கள்.

இன்றிரவு நாம் 75-லிருந்து தொடங்குவோம். இருக்கிறதா என்று பார்ப்போம்... நாம்—நாம் 1-கள், மற்றும் 15-கள், மற்றும் 20-கள், மற்றும் 50-கள், மற்றும்... சரி, யாரிடமாவது R-75 இருக்கிறதா? உங்கள் கையை உயர்த்துங்கள். உங்கள் சிறிய அட்டை, R-75. அங்கே வெளியே ஒரு பெண்மணியிடம் அது இருக்கிறது என்று நான் நம்புகிறேன். சரி. 76, யாரிடம் R-76 இருக்கிறது? நீங்கள் எங்கிருந்தாலும் சரி,



மாடப்பகுதியிலோ அல்லது எங்கே இருந்தாலும் உங்கள் கையை உயர்த்துவீர்களா? R-76, தயவுசெய்து உங்கள் கையை உடனே உயர்த்தவும். நன்றி. வாருங்கள். 70, 77. சரி, அம்மா. 78, R-78, தயவுசெய்து உங்கள் கையை உடனே உயர்த்துவீர்களா? 78? சரி. 79, 79, 80, யாரிடம் 80 இருக்கிறது, 80? சரி. 81. சரி. 82, 83, 84. அவர்கள் தயவாய் வரட்டும்... பாருங்கள், நீங்கள் அவர்களை ஒவ்வொருவராக அழைக்கக் காரணம் என்னவென்றால், எல்லாரும் வந்து நடைபாதைகளை நெரிசலாக்கிவிடுகிறார்கள். அவர்கள் ஒரு வரிசையில் வருவதற்கு நாம் கொஞ்சம் வழிவிட வேண்டும்.

84, இப்போது, பார்ப்போம். சரி. 85, 85 யாரிடம் இருக்கிறது? சரி, அம்மா. 86, 86, நான் அதைப் பார்க்கிறேனா? 86? சரி. 87? 88? 89? சரி, சகோதரனே. 90, 91, 92, 93, 94. சரி. 95, 95, ஆம், நான் அதைப் பார்க்கிறேன். என்னை மன்னியுங்கள். 95, அது எங்கிருந்தாலும், உங்கள் கையைச் சற்றே உயரமாகத் தூக்குவீர்களா? 95, ஜெப அட்டை... என்ன... சரி. 95, 96, 97. சரி. 98, ஜெப அட்டை 98 யாரிடம் இருக்கிறது,